THIRUPPUGAZH ANBARGAL (Regd.)
N-110, Connaught Circus, New Delhi 110001

# குருஜி நினைவு பூங்கொத்து



## மணி விழா வெளியீடு

New Delhi, September 8th and 9th 2018



THIRUPPUGAZH ANBARGAL (Regd.)
N-110, Connaught Circus, New Delhi 110001

# குருஜி நினைவு பூங்கொத்து

தொகுத்தவர் :
திருமதி உமா பாலசுப்ரமணியன்

## 60th YEAR CELEBRATIONS OF THIRUPPUGAZH TEACHING STARTED BY GURUJI SHRI A. S. RAGHAVAN

## மணி விழா வெளியீடு

வெகுமல ரதுகொடு வேண்டி யாகிலு
மொருமல ரிலைகொடு மோர்ந்து யானுனை
விதமுறு பரிவொடு வீழ்ந்து தாடொழ

அருள்வாயே

Website : www.kamakoti.org
email : kanchimutt@gmail.com
உ
☎ 044-27222115
Acts : 044-27224236
Fax : 044-27224305
|| Sri Chandramouleeswaraya Namaha ||
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi
**JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL**
**Srimatam Samsthanam**
No. 1, Salai Street, KANCHEEPURAM - 631 502.

Date : 04.09.2018

புதுதில்லியைச் சேர்ந்த திரு. A.S.ராகவன் அவர்கள் அருணகிரிநாதரின் திருப்புகழை தான் கற்றதோடு இல்லாமல் இந்தியா மட்டுமல்லாது உலகம் முழுமையும் திருப்புகழை பரப்பும் விதத்தில் மற்றவர்களுக்கும் சொல்லிக்கொடுத்து அதன்மூலம் அந்த 'செந்தில் ஆண்டவர்' எல்லாருடைய மனதையும் ஆள்பவனாக்கியிருக்கிறார். அவர் திருப்புகழ் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து 60வது வருடம் ஆனதை ஒட்டி மணிவிழாவாக அவருடைய சீடர்கள் 'திருப்புகழ் அன்பர்கள்' அமைப்பு மூலம் புதுதில்லியில் கொண்டாடப் படுவதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். சீரிய இந்த ஆன்மீகப் பணி மேலும் தொடர்ந்து நடைபெற ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி:

# குருஜி நினைவு பூங்கொத்து

பரமமாயையின் நேர்மையை யாவரும்
அறியொணாததை நீ குருவாய் இது
பகருமாறு செய்தாய் முதல் நாளுறு பயனோதான் --------

குருவாய் வந்து என் உள்ளம் குளிரக் குதி கொண்டவே ! இது அருணகிரிநாதரின் வாக்காக இருந்தாலும் திருப்புகழ் அன்பர்கள் ஒவ்வொருவரும் நினைக்கவேண்டிய வரிகளாகும். உலக சமுதாயம் ஒன்று பட்டு, ஒருமைப்பாட்டுடனும், அமைதியுடனும் வாழ்வதற்காக பல ஞானிகள் அழகாக வழி வகுத்துக் கொடுத்தனர். அந்த வகையில் நம் குருஜி திரு. ஏ.எஸ். இராகவன் அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அவருடைய பணியை அளக்க முடியாதபடியாக மேன் மேலும் பல ஆசிரியர்கள் மூலமாகவும், அன்பர்கள் மூலமாகவும், ஆலமரம் போல் தழைத்து, பலருக்கு நிழல் கொடுத்து இதம் கொடுத்து, வளர்ந்து பரவி வருகின்றது முருகன் செயல்தான் என்றாலும், அது நமக்குக் குருஜி மூலமாகக் கிட்டியிருக்கிறது என்று ஆணித்தரமாக எங்கு வேண்டுமானாலும் கூறலாம். தன்னைப்பூரணமாகவே இறைப்பணியில் ஆழ்த்திக் கொண்ட குருஜிக்கு எல்லோர் சார்பிலும் முதலில் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்வோம். திருப்புகழ் பாடுபவர்கள், கேட்பவர்கள், அதையே நினைப்பவர்கள் யாவரும் அந்த இன்பத்திலேயே திளைக்க வேண்டும் என்ற மனப்பான்மைகொண்டே குருஜி அவர்கள் சந்தச் சிறப்பு கெடாது, தாளங்களும், பாடலுக்கு ஏற்ற ராகங்களும் அமைத்து, நம் வாயில் ஊட்டி விட்டிருக்கிறார். செந்திலாண்டவனிடம் மிக்க அன்பு பூண்டு அதிக நம்பிக்கை வைத்திருந்த நமது குருஜி அவர்களால் திருப்புகழ் பாடல்களுக்கு அமைந்த எல்லா ராகங்களும் ஆண்டவனால் உணர்த்தப்பட்டவைகளே! ஒருவகையில் சுற்றி வளைத்து குருவின் குருவான முருகன் நமக்கும் குருவாக விளங்குகிறார்தானே! 'ஓம்' என்று ஆரம்பித்து மனத்தை நாதத்தில் இருத்தி, விநாயகர் துதி, நாமாவளி, குருவணக்கத்துடன் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருப்பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், ஏனைய தலங்கள், பொதுப்பாடல்கள், பஞ்சபூதத்தலங்கள், சோலை மலை என்று பட்டியல் நீண்டாலும் பாடி முடித்தவுடன், முடிந்து விட்டதே என்ற ஏக்கத்தை நம் மனதில் பதிய விட்ட குருஜிக்கு ஒரு ஜே! திருப்புகழ் இசை வழிபாடு என்ற புத்தகத்தை உருவாக்கி அதை முதலில் கையில் பிடித்து, பின் நெஞ்சில் பதிய வைக்குமாறு செய்த குருஜிக்கு இன்னொரு ஜே! “தகைமை பெற்று உனது பொற் சரணம் எப்பொழுதும் நட்புடன் நினைந்திட அருள்வாயே” என்ற அருணகிரிநாதரின் வாக்கு போல நாமும் சிறந்து விளங்கி திருப்புகழ் பாடல்களைப்பாடி முருகனின் பாத தாமரையை எப்போதும் நினைப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது இந்த திருப்புகழ் இசை வழிபாடு நூல். நாளாக ஆக பெருகிடும் அன்பர்களுக்கு ஏற்ப, எண்ணிக்கையில் உயர்ந்தது திருப்புகழ் இசை

வழிபாட்டுப் பிரதிகள். அன்பர்கள் யாவரும் தங்கள் வழிபாட்டில் ஒருசேர ஒன்றிய மனத்துடன் ஒரே குரலில் பாவத்துடனும், ராக, தாள, லயத்துடனும் பாடும் திருப்புகழ் ஒருநாளும் வீண் போகாது. நினைத்ததும் அளிக்கும் திருப்புகழ், மனத்தையும் உருக்கி அன்பர்களின் வினைப் பகையை அறுத்து, நினைப்பவை முடித்து, மனத்துயர் கெடுத்து அருளும் தன்மை படைத்தது.

இவ்வாறு ஆன்மீகத் தொண்டு புரிந்து அன்பர்களுக்கு முருகனிடம் நம்பிக்கை பிறக்குமாறு செய்து அன்பும், அவிரோதமும் செழித்து ஓங்கி, தர்மமும் செழிக்கச் செய்வதற்கு, அருணகிரிநாதர் மூலமாக உலகுக்குத் தந்த திருப்புகழ் முதலான நவமணிகளை, நம் குருஜி அவர்கள், தான் முறையாக மற்றவர்களுக்குக் கற்பித்து, பிறருக்கும் கற்றுக்கொடுக்க வழி வகுத்தார். அவரின்றி திருப்புகழ் இல்லை என்றே சொல்லும் நிலைமை இப்பொழுது. அப்படிப்பட்ட குருஜிக்கு முதற்கண் நம் வணக்கத்தை பல்லாண்டு வாழி என வாழ்த்தி, வாழ்த்து தெரிவித்துக் கொள்வோம்.

## வாழி பல்லாண்டு

ஏறு மயில் ஏறி வரும் ஈசன் புகழ் பாடிடவே
ஆறுமுக மங்கலத்தில் அவதரித்த அண்ணலவர்
தார் மார்பன் தணிகேசன் பேர் பாடும் பேராளன்
பார் போற்றும் பா வல்லவன் பல்லாண்டு வாழியவே

வடக்குப் புறத்தில்இருந்த படியே வண்தமிழ் வேலன் அடிபற்றிடவே
கிடக்க நினைத்து அவன்தன் புகழை கீதம்இசைத்து வாழுபவர்
எவரும் யாதும் யானாகும் இதயபாவம் கொண்டு அவர்
தனையும் மறந்தே அருணகிரியின் தமிழின் மழையில் ஆழ்பவர்
வாழி வாழி வாழி வாழி பல்லாண்டு வாழியவே—

சாந்தமொடு சந்தமுடன் புகழ் பாடும் சீராளன்
காந்தமென கந்தனையே சபையில் அழைத்து உருகுபவர்
தான் அன்றி உணராது தரணி மாந்தர் அனைவோர்க்கும்
கானம் இசைத்து கந்தனவன் கருணைத்திறன் காட்டியவர்
வாழி வாழி வாழி வாழி பல்லாண்டு வாழியவே

ராகம் எத்தனை தாளம் எத்தனை பாவம் எத்தனை பதமும் எத்தனை
கற்றவர் எத்தனை கற்பவர் எத்தனை கருணை எத்தனை கண்டவை எத்தனை
அத்தனை அளித்து இறை நெறி குவித்து எத்தனும் வாழஏறு நடையும் கொண்டாயே
எம்குரு நீர் வாழி வாழி வாழி பல்லாண்டு வாழியவே

ஜானகீ மணவாளன் சந்தத் திருப்புகழினையே
சங்கீதமாய் அமைத்த திறத்தினை என் சொல்லுவது
இம்மை பிறவிதனில் யாம் செய்த புண்ணியமோ
உம்மை குருவெனவே உவந்தளித்தான் உமைபாலன்
வாழி வாழி வாழி வாழி பல்லாண்டு வாழியவே

ஊன் உருக உயிர் உருக உளம் உருக குகன் உருக
வான்போலுன் பணியினையே பேணி காத்திடுவோம்
தேன் போன்ற செந்திலவன் துணை கொண்டு குருநாதன்
மேன்மேலும் அருளுடனே மேதினியில் வாழ்ந்திடவே
வாழி வாழி வாழியென்று வாழ்த்திடுவோம்

ஆழிசூழுலகில் அருமருந்தன்ன திருப்புகழுணர்த்தும்
அன்பு, அவிரோதம், அறம், அகிலஉலக நலன், ஆசையறல்
ஆன்மீகம் மற்றுமுள நல்லன யாவையுந்தெளிவுற போதித்து
வாழ்வாங்கு வாழ எமக்கு வழிசொன்ன ஆசான்
சீலத்திரு ராகவ குருஜி ஆற்றும் பணி அறாது ஓங்க
அருள்வாய் அலைவாயமர்ந்த ஆறுமுகத் தெய்வமே
அருள்வாய் அலைவாயமர்ந்த ஆறுமுகத் தெய்வமே
அருள்வாய் அலைவாயமர்ந்த ஆறுமுகத் தெய்வமே ----

இவ்வாறு இன்பத்தேன் பருகியவண்ணம் கலையாது இவ்வளவு ஆண்டுகள் அதாவது குருஜி திருப்புகழ் பாடத் தொடங்கிய அறுபது ஆண்டு பகுதியில் சில அன்பர்களுக்கு நிகழ்ந்த சிறந்த அநுபவங்களையும், மேற் கொண்டு கண்டு களித்தால் குருஜி நம்முடன் இப்பொழுதும் இருப்பது போன்ற ஒரு உணர்வு வருவதை நாம் உணர்ந்து இன்புறலாம்.

குருஜியைப்பற்றிய தம் அநுபவங்களை தில்லி இராமமூர்த்தி அவர்கள் என்ன கூறுகிறார் என்பதை இப்பொழுது கண்டு களிக்கலாம் . .

**குருஜி ஒரு தீர்க்க தரிசி, நல்ல ஆசான்**-------

தில்லிக்கு 1966 ஆம் ஆண்டு கடைசியில் வந்தபோது குருஜி கணீரென்று பாடிய கந்தர் அநுபூதியை முதன் முதலில் 15 நிமிடங்கள் அநுபவித்ததுதான் என் வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்தது. அதிலிருந்து பல அன்பர்களுடன் பழகி, பிறகு திருப்புகழ் பஜனைகளுக்குச் சென்று வந்தேன். இவ்வாறு ஆரம்பிக்கின்றது டில்லியில் வசிக்கும் திரு. இராமமூர்த்தி அவர்களின் அநுபவம். இவருக்கு குருஜியுடன் இன்பமான பல அநுபவங்கள் ஏற்பட்டிருந்தாலும் சிலவற்றை மட்டும் நாம் இங்கே பகிர்ந்து கொள்ளலாம். இனி அவர் கூறும் வழியில் நாம் -----

1968—69 'திருப்புகழ் அன்பர்கள்' அமைப்பின் பொருளாளர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு எனக்கு குருஜியை அவரது இல்லத்தில் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. விட்டல் மாமி என்று செல்லமாக அழைக்கப்படும் என் மூத்த சகோதரியை ஒருமுறை குருஜி பஜனைக்கு அழைத்துச் சென்றிருந்தேன். பஜனை முடிந்து வீடு வந்தவுடன்

"அக்கா பஜனை எப்படியிருந்தது?" என்று கேட்டேன்.

உடனே அக்காவும் " உங்க குருஜி பண்றது பஜனையே இல்லை" என்று கூறினாள்.

எனக்கு தூக்கிவாரிப்போட்டது.

"என்ன அக்கா இந்த மாதிரி சொல்ற?" – என்று கேட்டேன்

"ஆமாண்டா! உங்க குருஜி பஜனை எங்க பண்றார்? தபஸ்னா பண்றார். மூன்றரை மணி நேரம் கையை காலை நீட்டி, மடக்காம, ஒரு சொட்டு ஜலம் சாப்பிடாம, உருகி உருகி பாடராறே! இது தபஸ் இல்லாம என்ன? இந்த மாதிரி பாடறவா இந்தக்காலத்திலே யார் இருக்கா சொல்லு பார்க்கலாம்?"

1993ல்தான் திருப்புகழ் இசை வழிபாடு புத்தகம் வெளியிடப்பட்டது. அதுவரை திருப்புகழ் மாலையிலிருந்து தான் நாங்கள் யாவரும் பாடல்களைப் பாடினோம். அந்தக் காலத்தில் டால்மியா வெங்கடேசன் அவர்கள் இல்லத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் இரண்டு மணி நேரம் வகுப்புடன் பஜனையும் நடக்கும். ஒரு திங்கட்கிழமை திரு. வெங்கடேசன் எட்டிகுடி திருப்புகழ் பாடல் பாட விருப்பப்பட்டதால், "திருப்புகழ் மாலையில்" இருந்த "ஓங்கும் ஐம்புலன்" என்ற பாடலை குருஜி ஆரபி ராகத்தில் மெட்டமைத்துப் பாடினார். அதே போல காரில் ஹரித்வாருக்குப் போகும்போது "கருப்பற்றூறி" நடபைரவியில் அமைத்துச் சொல்லிக் கொடுத்தார். அநேக பாடல்களையும், அதன் ராகங்களையும் குருஜிக்கு செந்தில் ஆண்டவனின் உத்தரவாகி உணர்த்தியதாகத் தெரிகிறது. ஆனால் அவர் என் அண்ணா மன்னியிடம் என்ன சொன்னார் தெரியுமா?

"ஒரு சமயம் 'இந்தப் பக்கத்திலுள்ள இந்தப்பாடலை இந்த ராகத்திலே சொல்லிக்கொடு' என்று முருகனிடமிருந்து உத்தரவு வந்ததாக. ஆனால் துரதிருஷ்டவசமாக அந்த சமயத்தில் அந்த ராகம் அவருக்கு அவ்வளவு பரிச்சயம் இல்லாததால், முதலில் அந்த ராகத்தை நன்றாக அறிந்துகொண்டு, பிறகு சொல்லிக் கொடுத்ததாக அறிந்தேன். அவ்வாறு குருஜி சொல்லிக்கொடுத்த பாடல் என்ன தெரியுமா? "அரியயன் அறியாதவர்" என்ற ரேவதி ராகத்தில் அமைந்த பாடலாகும்" என்று கூறினார். பிற்பாடு இதனை 8-10-1981ல் கரோல்பாக் வகுப்பில் யாவருக்கும் சொல்லிக் கொடுத்தார்.

21-10-1996 விஜயதசமி அன்று சங்கரவித்யாகேந்திரா சாரதா கோவிலில் "வேதத்தில் கேள்வி" என்ற திருப்புகழ் பாடல் பிறந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு குருஜி வீட்டிற்குப் போயிருந்த போது அவர் ஒரு சேதி சொன்னார். "முந்தா நாள் நான் விஜயதசமி அன்று சொல்லிக்கொடுத்த பாட்டு சிருங்கேரி மகாசந்நிதானத்தோட

அநுக்கிரகம்" ---தொடர்ந்தார். என்ன சொல்லப்போகிறார் என்று நான் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். "நான்கு ஐந்து நாட்களாக நான் பல வேலைகளில் ஈடுபட்டிருந்ததனால் திருப்புகழ் புத்தகத்தில் கை வைப்பதற்கே நேரம் கிடைக்கவில்லை. விஜயதசமியன்று வேறு, ஒரு விசேஷத்திற்குப் போய்விட்டு, நேரே சாரதாம்பாள் கோவிலுக்கு வந்துவிட்டேன். மனசு சுத்தமா ப்ளாங்கா இருந்தது. ஒண்ணுமே தோணலை. இந்த விஜய தசமிக்கு பழைய பாட்டுதான் சொல்லிக்கொடுக்க வேண்டும் போல இருக்கிறது என்று எண்ணினேன். கோவில் கதவை திறக்கச் சொல்லி மகா பெரியவாள் படத்திற்கு முன்னால் உட்கார்ந்து அவரையே தியானம் பண்ணிண்டிருந்த போது தான் சந்தேகமில்லாம பெரியவா அநுக்ரஹத்தால "வேதத்தில் கேள்வி" என்ற இந்தப் பாட்டு வந்தது"--- என்றார்.

குருஜி அவர்கள் தான் ரிட்டையர் ஆன பிறகு தேவாரம், திருவாசகம், திவ்யப்ரபந்தம் போன்றவைகளை எல்லாம் யாவருக்கும் சொல்லிக் கொடுக்க நினைத்தார்கள். ஆனால் செந்திலாண்டவனின் உத்தரவு வராததால் திருப்புகழ் ஒன்றே போதும் என்று இருந்துவிட்டார்.

ஒரு முறை 'தவநெறி தவறிய' என்று தொடங்கும் பாடலை அன்பர்கள் சரியாகப் பாடவில்லையாதலால் அந்த வரியை எப்படிப் பாடவேண்டும் என்று கூறி அதற்கு உரிய விளக்கத்தையும் குருஜி கூறினார். "அவன்" என்பது சற்று தூரத்தில் இருப்பவனைக் குறிக்கும். அதனால் அந்த வார்த்தையைச் சற்று சத்தமாக உச்சரிக்க வேண்டும். "இவன்" என்பது பக்கத்தில் இருப்பவனைக் குறிக்கும். அதனால் அதை மெதுவாக உச்சரிக்கணும். "உவன்" என்பது பொதுவாகச் சொல்லணும். அதேமாதிரி 'அவள்' 'அது' என்பதை சத்தமாகவும், 'இவள்' 'இது' என்பதை மெதுவாகவும் உச்சரிக்க வேண்டும் என்று கூறிய குருஜி, தன் குரலில் ஏற்ற இறக்கத்தோடு பாடிக் காண்பித்தது நம்மிடம் அவர் வைத்திருக்கும் ஈடில்லா அக்கறையைக் காட்டியது என்றேதான் சொல்ல வேண்டும்.

குருஜி திருப்புகழிலேயே ஆழ்ந்து ஆழ்ந்து ஊறி ஊறி.... அவர் உச்சரிக்கும் ஒவ்வொரு பதத்துக்கும் அவர் உச்சரிக்கும் விதத்தில் ஒரு சிக்னிபிகன்ஸ் (significance) இருக்கும். அதை அவர் விளக்கினால் தான் மற்றவர்களுக்கு நன்றாகப் புரியும். இல்லாவிட்டால் அவ்வளவு சுலபமாகப் புரியாது.

"சித்தி விநாயகா சரணம் சரணம்" இந்த நாமாவளியைப்பற்றி --- குருஜி ஒருமுறை எங்களுக்குக் கூறினார். "முதல் சரணம் விநாயகப் பெருமானுடைய பாதாரவிந்தங்களைக் குறிக்கிறது. இரண்டாவது சரணம் அதில் சரணமடைவதைக் குறிக்கிறது. அதனால் அதை உணர்ந்து கொண்டு பவ்யத்தோடு முதல் சரணத்தை உச்சரிக்க வேண்டும்" என்று "ஏழைக்கிரங்கும் பெருமாளே" என்று பாடும்போது, "இரங்கும் என்று உச்சரிக்கும்போது குரலும் கீழே இறங்க வேண்டும்" என்று ஒருமுறை கூறிப் பாடிக்காண்பித்தார். ஆஹா குருஜி குருஜிதான்.

ஒரு சமயம் என்னைப் பார்த்து, "காட்டில் குறத்திபிரான் பதத்தே கருத்தை புகட்டின் வீட்டில் புகுதல் மிக எளிதே" என்று அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் கூறுகிறாரே 'புகட்டின்' என்றால் என்ன அர்த்தம் என்று தெரியுமா?" என்று கேட்டார். வழக்கம்போல் நான் விழித்தேன். குருஜியே சொல்ல ஆராம்பித்தார். "அந்த புகட்டின் என்ற வார்த்தையை எவ்வளவு பொருத்தமாக உபயோகித்திருக்கிறார் பார்த்தாயா? பாலையும் மருந்தையும் கலந்து குடி என்றால் ஒரு குழந்தை மாட்டேன் என்றுதான் அடம் பிடிக்கும். அதையே பாலாடையில் எடுத்துக் கொண்டு குழந்தையை அமுக்கி வைத்துக் கொண்டு கம்பெல் பண்ணி புகட்டினாதான் அந்தக் குழந்தை அதைக் குடிக்கும். அந்த மாதிரி, நம்ம மனசை ஆண்டவனுடைய பாதாரவிந்தத்திலே செலுத்தினால் போறேங்கறதா? ஹூம்! ஹூம்! மாட்டேன்னுதான் அடம் பிடிக்கிறது. அதை கம்பெல் பண்ணி புகட்டினாதான் போறேங்கறது..." ஆஹா. என்ன அழகான விளக்கம்!

மேலும் ஒருநாள் 'இகபர சௌபாக்கியம் அருள்வாயே' என்று ஒரு பழனித் திருப்புகழில் கேட்கிறார் அருணகிரிநாதர். இகபர சௌபாக்கியம் என்றால் என்ன என்பதை சுவாமிமலை திருப்புகழில் சொல்கிறார். "கனம் அது உறு நீள் சவுக்ய சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வை" இகத்திற்கும் "தகைமை சிவ ஞானம் முத்தி பரகதியை" பரத்திற்கும் கேட்கிறார் என்று குருஜி அவர்கள் விளக்கம் அளித்தவுடன் என் மனம் ஆஹா என்ன அருமையான விளக்கம் என்று துள்ளிக் குதித்தது.

அது போல "சினத்தவர் முடிக்கும்" என்ற திருப்புகழ் பாடலில் "நிசிக்கரு அறுக்கும்" என்றும் கொள்ளலாம் "நிசிக்கரு வறுக்கும்" என்றும் கொள்ளலாம் என்று கூறி வறுத்தால் மீண்டும் வளரும் தன்மை போய்விடும் என்று அதற்குரிய விளக்கமும் தந்தார். எப்படித்தான் இப்படியெல்லாம் சிந்திக்க முடிகிறதோ?

1990களில் ஒரு வருடம் அருணகிரிநாதர் விழாவின் போது கடுமையான வெய்யிலாக இருந்த சமயம். பஜனை முடிந்து யாவருக்கும் விபூதி கொடுத்து பிறகு அவர் சாப்பிடுவதற்கு மிகவும் நேரம் ஆகிவிட்டது. அவர் முகம் மிகவும் வாடி இருந்தது. நான் சொன்னேன் "குருஜி எங்களுடன் நீங்கள் டிபன் சாப்பிட்டிருக்கலாம்! உங்கள் முகம் பெரிதும் வாடிவிட்டது" என்று. அதற்கு அவர், "இதோ பாரு ராமு! பஜனை முடிந்து நான் கொடுக்கற விபூதியால கொஞ்சமாவது பலன் இருக்கணும்னா, நான் சில கட்டுப்பாடுகள், டிசிப்ளின்களை அநுசரிச்சுத்தான் ஆகணும்" என்றார், மற்றவர்களின் நலனில் ஈடுபாடு கொண்ட குருஜி அவர்கள்.

எனக்கு ராகம், தாளம், சங்கீதம் ஒன்றுமே தெரியாத நிலை. ஒரு புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குருஜி சொன்னார், "நான் பாடுகிறேன், நான் நன்றாகப் பாடுகிறேன், நான் மற்றவர்களைவிடச் சரியாக, நன்றாகப் பாடுகிறேன்" என்ற இந்த உணர்ச்சிகளை மனத்திலேயிருந்து அறவே அகற்றிவிட வேண்டும். நம்மைப் பாட வைப்பது ஆண்டவன்! ஆண்டவன் இச்சையில்லாமல் பாடும் பாட்டுக்கள் நன்றாக

அமையாது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். எல்லோரும் ஒரே மாதிரியாகப் பாட முடியாதுதான். ஆண்டவன் அவரவர்களுடைய சக்திக்கும், குணத்திற்கும் ஏற்ப அவர்களைப் பாட வைக்கிறான். ஆகையினால் ஒருவர், இன்னொருவர் பாடும்போது குருநாதர் கற்றுக் கொடுத்தபடி சரியாகப் பாடவில்லையே என்று உள்ளத்திலே வருந்துவதோ, அல்லது வெளிப்படையாகச் சொல்லி பிறர் மனதைப் புண்படுத்துவதோ திருப்புகழ் அன்பர்களின் செயலாக இருக்கக் கூடாது. "திருப்புகழை உரைப்பவர்கள், படிப்பவர்கள், மிடிப்பகையை ஜெயித்தருளும் இசைப்பிரியனான முருகன், ராக, பாவ, தாளத்தோடு பாட முடியாத அன்பர்கள் திருப்புகழை உரைநடையிலேயே படித்தும், சொன்னாலும், மனதளவிலே படித்துத் தெரிந்துகொண்டாலும் அவர்களது குறைகளையெல்லாம் நீக்கி அருளுகிறான்" —என்றாரே பார்க்கலாம். அவர் இவ்வாறு சொன்னது என் மனதிற்கு இதமாக இருந்தது.

அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களை சந்தம் கெடாமல் அங்க தாளங்களில் அமைத்துச் சொல்லிக் கொடுத்திருப்பது, குருஜி திருப்புகழுக்காகச் செய்த முக்கிய பணி என்று நான் கருதுகிறேன். இதனுடைய அருமை மற்ற சபாக்களில் பாடும் திருப்புகழைக் கேட்டால்தான் தெரியும். அவர்கள் வார்த்தைகளை நீட்டி, குறைத்து, சிதைத்து, எட்டு அக்ஷரங்களிலும், திஸ்ரத்ருபுடை, கண்டசாபு, என்ற தாளங்களிலும் அடக்கி, அர்த்தம் புரியாமல் செய்துவிடுகிறார்கள். ஆனால் குருஜி அமைத்துள்ள அங்க தாளங்கள் அழகழகாக, தெளிவாக, வார்த்தைகளை அர்த்தம் புரிந்துகொண்டு உச்சரிக்கவும், பாடவும் உதவுகின்றன. குருஜி கிரேட் தான்.

வகுப்பில் முதலிலெல்லாம் மாணவர்கள் தாளத்தைக்கண்டு பயந்துவிடுவார்களோ என்று எண்ணியே அதிகம் தாளத்தைப்பற்றி குருஜி அவர்கள் வற்புறுத்தியதில்லை. திருப்புகழ் இசை வழிபாட்டுப் புத்தகத்தில் கூறியுள்ளபடி தற்காலத்தில் கையாளப்படும் தாளங்கள் பெரும்பாலும் லகு, த்ருதம், அநுத்ருதம் என்ற மூன்று அங்கங்களிலேயே அமையப்பட்டுள்ளன, மற்றைய மூன்று அங்கங்களான குரு, புலுதம், காக பாதம், நடைமுறையில் இல்லை. இதைத்தவிர க்ருஷ்ய, சர்பிணி, பாடகம் என்ற அங்கங்களும் உள்ளன. இந்த அங்கங்களை அமைத்து திருப்புகழ் பாடும் ஒன்றிரண்டு சபாக்கள் இருப்பதாக குருஜி ஒரு சமயம் பேச்சு வாக்கில் குறிப்பிட்டார். இப்படியே பேச்சு நீடித்தது. நானும் பல தாள நுணுக்கங்களை அவரிடமிருந்து கற்றுக்கொண்டு, பிற்பாடு தாளங்களைப்பற்றிய பல சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்து கொண்டேன். ஆதி தாளம், மிஸ்ர ஜாதி ஜம்பை தாளம், மிஸ்ர ஜம்பை திஸ்ர நடை ---- அதாவது சாபுதாளம். அவருடைய கணக்குப்படி 175 தாளங்களுக்கு நான் சார்ட் போட்டு அதற்குப் பெயரையும் கண்டு பிடித்து மகிழ்ந்தேன். உதாரணமாக 12½ அக்ஷரம்:-- 1) திஸ்ர ரூபகம் கண்ட நடை 2) கண்ட ஏகம் கண்ட நடை 3) சதுஸ்ர மட்யம் கண்டநடை சாபு என்று எவ்வளவோ முயன்றும் பல தாளங்களைக் கண்டுபிடிக்கமுடியாது தவித்தேன். குருஜியிடமே

கேட்கலாமா என்று ஒரு நப்பாசை. ஆனால் கேட்கவில்லை. சிறிது சிறிதாக ஒவ்வொரு பாட்டிற்கும் அவரிடம் சந்தேகங்கள் கேட்டு நான் தாளங்களைப் பற்றி சிறிதளவு கற்றுக்கொண்டு முன்னேறினேன்.

குருஜிக்கு செந்திலாண்டவனிடத்திலும், முருகனிடத்திலும் இருக்கும் பக்தியையும், நம்பிக்கையைப் பற்றியும் நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. 1983ஆம் ஆண்டு அருணகிரிநாதர் விழா, வெள்ளி விழா. கணக்குவகைகளை நான் தான் பார்த்துக்கொண்டிருந்தேன். உத்தர ஸ்வாமிமலையில் ஓர் ஓரமாக உட்கார்ந்து கொண்டு கணக்குகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சமயம் எனக்கு ஒரு பெரிய ஷாக். கணக்கில் 5000ரூபாய் குறைகிறது! அந்தக் காலகட்டத்தில் 5000 என்பது 50000க்குச் சமம் ஆகும். பதைபதைப்பு, டென்ஷன். ரூபாயை எங்கே கோட்டை விட்டேன் என்று ஒரே குழப்பம்! குருஜியிடம் சொல்வதா? வேண்டாமா? என்று ஒரு பக்கம் ஒரு தயக்கம் வேறு.

அப்பொழுது அந்தப்பக்கமாக எதிர்பாராதவிதமாக குருஜியே வந்து கொண்டிருந்தார். அவர் நான் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு, "என்ன ஆச்சு என்ன விஷயம்?" என்று கேட்டார். நானும், "ஒன்றுமில்லையே குருஜி!" என மழுப்பினேன். "உன் மூஞ்சியே சரியாயில்லையே! என்ன ஆச்சு சொல்லு?" என்று துருவித்துருவிக்கேட்டார். நான் தயங்கிக் கொண்டே பணம் குறைந்த விஷயத்தைச் சொன்னேன். அவர் சிறுது கூடப் பதட்டப்படாது, "அப்படியா? அந்த காஷ் புத்தகத்தை இங்கே கொண்டு வா பார்க்கலாம்!" என்றார். நான் கொண்டு வந்து கொடுத்ததும் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக் கொண்டே வந்தார். "ஈஸ்வர ஐயருக்கும், நாராயணனுக்கும் கொடுப்பதற்காக ரூ2500/-, ரூ2500/- தனிக்கவரில் எடுத்து வைக்கச் சொன்னேனே வெச்சிருக்கியா?" என்றார்.

"வெச்சிருக்கேன் குருஜி" ----படபடப்புடன் என் பதில்.

"சரி அதை காஷ் பாலன்சில் எடுத்துண்டாயா? அந்த செலவு இன்னும் காஷ் புக்குல வரலயே!"

எனக்கு உடனேயே என்னுடைய தவறு புரிந்துவிட்டது. எனக்கு இருந்த பதட்டத்தில் அந்த ரூபாய் 5000த்தை அடியோடு மறந்து விட்டேன். அடுத்த நாள் அவர்களுக்குக் கொடுத்த பிறகுதான் காஷ் புத்தகத்தில் செலவாக எழுத முடியும். அதுதான் முறை. "ராமு! துளிக்கூடக் கவலைப்படாதே! செந்திலாண்டவன் நம்மளைக் கைவிடமாட்டான்". இப்படி பல தருணங்களில் அவர் எனக்கு உதவி புரிந்திருக்கிறார் என்றால்..... கண்ணில் துளிரும் நீரைத்துடைத்துக் கொள்கிறேன்.

குருஜியிடம் பொறுமையும் நிதானமும் இருந்தாலும் சில சமயங்களில் அவருக்கு அசாத்தியமான கோபமும் வரும் பிரளயகால ருத்திரன் போல. அந்த மாதிரி கோபத்தை நான் இரண்டு சமயங்களில் பார்த்தேன். பல வருடங்களுக்கு முன்னால் ஒரு படி விழாவிலும், அருணகிரிநாதர் விழாவிலும் தான். கோபமெல்லாம் ஒரே நாள்தான் இருக்கும், அடுத்த நாள் அது ஓடிப்போய், சம்பந்தப்பட்டவருடன் போனில்

தொடர்பு கொண்டு சமாதானமாகப் பேசும்தன்மையாகிவிடும். ஆஹா குருஜி! என்று கையெடுத்துத்தொழத்தான் முடிகிறது.

குருஜி யாரைப்பற்றியும் தூஷணையாகப் பேசமாட்டார். அதே போல அவரைப்பற்றி மற்றவர்கள் அனாவசியமாகப்பேச இடம் கொடுக்கக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பார். ஒரு முறை சங்கர வித்யா கேந்திராவில் சனிக்கிழமை மாலை திருப்புகழ் வகுப்புகளும், ஞாயிறு காலை சிறுவர்களுக்கு ஸ்லோக வகுப்பு என்றும் தீர்மானித்து என்னிடம் அதைப்பற்றி நோட்டீஸ் அடிக்கக் கொடுத்திருந்தார். ஆனால் மறு நாளே சிறுவர்களைப்பற்றிப் போட வேண்டாம் என்று சொன்னார். அவர் வீட்டிற்கு வந்து விவரம் கேட்டதின் பேரில் குருஜியும், "இவனுக்கு ஸமஸ்கிருதம் என்ன தெரியும் ஸ்லோகமெல்லாம் கத்துத் தரதுக்குன்னு மத்தவா பேசறதுக்கு இடம் கொடுப்பானேன்னுதான் உன்னை சிறுவர்களுக்கான பகுதியை விலக்கச் சொன்னேன். குழந்தைகளுக்குக் கட்டாயம் கற்றுத்தரப்போகிறேன். ஆனால் நோட்டீஸில் போட வேண்டாம்" என்றார். குருஜி சொன்னது வாஸ்தவமான வார்த்தைகள். சிலரைப்பற்றி அவருடன் விவாதம் கூடப் பண்ணியிருக்கிறேன். ஆனால் நாளாவட்டத்தில் குருஜியின் கணிப்புதான் சரியானதாக இருப்பது தெரிய வரும்.

ஒரு சிவராத்திரி அன்று ஒருவர் அகத்தில் அவர் வெகு நேரம் பாடிய சிவ நாமாவளி காதில் வெகு நேரம் ஒலித்துக் கொண்டே இருந்தது. இந்த அநுபவத்தைப்பற்றி நான் குருஜியிடம் பகிர்ந்து கொண்டபோது அவர் சொன்னார், "உண்மையான பஜனையின் லக்ஷணம் இதுதான். உண்மையான பஜனை இந்தமாதிரி மற்றவர்களிடம் தாக்கத்தைத்தான் ஏற்படுத்தும். ஆனா இந்த அநுபவம் எல்லா சமயத்திலும் கிடைக்காது, ஒருசில சமயங்களில்தான் கிடைக்கும்" என்றார். குருஜி அவர்கள் அநாவசியமாக பிறர் பணத்திற்கு ஆசைப்பட மாட்டார், ஒரு டிஸிப்ளின் எப்போழுதுமே அவரிடம் இருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படுவேன்.

1983ல் சில்வர் ஜூபிலி முடிந்த பிறகு, மிச்சம் இருந்த பணத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானம் செய்தோம். ஆனால் குருஜி பிடிவாதமாக அதற்கு மறுப்புத் தெரிவித்தார். திருப்புகழ் விழாவிற்காக கலெக்ட் செய்ததில் ஒருபொழுதும் கை வைக்கக் கூடாது என்று. அதற்குப் பிறகு மிகுந்த சிரமப்பட்டு அவரை சம்மதிக்க வைத்து "Guruji A.S.Raghavan Falicitation Committee" என்று அமைத்து பணம் கலெக்ட் செய்து அடுத்த வருடம் 1984ல் விழா நடத்தினோம். குருஜிக்கு போன் வந்த பிறகு அந்த பில்லை அசோசியேஷன் கொடுப்பதாகத் தீர்மானித்திருந்தாலும், தன்னுடைய குழந்தைகளிடம் பேசிய பில்லை தவிர்த்து, மற்றவைகளுக்கு மட்டும் வாங்கிக் கொள்வார். என்னே அவர் பண்பு! அவர் பண்பை நினைத்து உருகினேன்.

ராமக்ருஷ்ணர் தக்ஷிணேஸ்வரர் ஆலயத்தில் இருந்துகொண்டு, கடுமையான சாதனைகளை மேற்கொண்டு, தேவி தரிசனம் பெற்று, பின்னர் வாரக் கடைசிகளில்

கல்கத்தாவிற்கு குதிரை வண்டியில் சென்று ஹரி பஜனைகள் செய்து பக்தியையும் தெய்வீகத்தையும் பரப்பினார். அவருடைய பணி தங்கு தடையில்லாமல் நடை பெற அந்தந்த கால கட்டங்களில் பல நபர்களை காளி மாதா அனுப்பி வைத்தார். அதே போல குருஜியின் திருப்புகழ் பணி தங்கு தடையில்லாமல் நடைபெற வேண்டி செந்திலாண்டவன் அந்தந்த காலகட்டங்களில் தகுந்த நபர்களை குருஜிக்கு உதவி செய்ய அனுப்பி வைத்தான். பலர் அவர்களால் முடிந்த அளவு குருஜியை வீட்டிலிருந்து திருப்புகழ் வகுப்புக்கு அழைத்துச் சென்று திரும்பக் கொண்டு விட்டனர்.

குருஜிக்கு எவ்வளவோ விஷயங்கள் தெரிந்திருந்தாலும் தனக்குத் தெரிந்ததாகவே காட்டிகொள்ள மாட்டார். ஒரு சமயம் அஷ்டாங்க யோகத்தின் கடைசி நிலையான சமாதி, அதற்குமேற்பட்ட நிர்விகல்ப சமாதி, அதற்கு மேற்பட்ட நிலைகள், ஸ்ரீவித்யா தத்துவம், அத்வைத தத்துவம் முதலியவற்றின் சில அபூர்வமான விஷயங்கள் பற்றி அவர் சொன்ன போது ஆச்சரியமாகவே இருந்தது. இவர் எப்பொழுது, எங்கே இதையெல்லாம் படித்தார்? என்று.

குருஜிக்கு மேடையில் தனித்து சிலபேர்களை வைத்துக்கொண்டு திருப்புகழ் பஜனை செய்வது அவ்வளவாகப் பிடிக்காது. ஒரு முறை புசா ரோடு மதராஸி ஸ்கூலில் திருப்புகழ் பஜனை ஏற்பாடு செய்திருந்தார்கள். குருஜி அங்கு வந்து பார்த்துவிட்டு, படங்களையும், குத்து விளக்கையும் மேடையிலிருந்து எடுத்து கீழே வைக்கச் சொல்லி "திருப்புகழ் பஜனையில், பாடுபவர்கள் வேறு, கேட்பவர்கள் வேறு என்று தனியாகக் கிடையாது. எல்லோருமே பாடுபவர்கள் தாம், எல்லோருமே கேட்பவர்கள் தாம்" என்று கூறி கீழே உட்கார்ந்து பஜனை செய்தார். 'திருப்புகழ்' பக்தியோடு ஆண்டவனுக்கு சமர்ப்பணம் செய்ய வேண்டியது ஒன்று என்று குருஜி கருதினார். இவ்வாறு குருஜி திருப்புகழுக்காகச் செய்தது பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு ஒரு முடிவே இல்லை என்று கூடச் சொல்லலாம். இது தொடர்ந்து கொண்டே போகும்.

சரி! குருஜியைப்பற்றிய சில சிறந்த பண்புகளை நாம் நினைவு படுத்திக் கொள்ளலாமா?

1. திருப்புகழை அழகழகான ராகங்களில் பாடச் சொல்லிக் கொடுத்தது.
2. சந்தம் கெடாமல் அங்க தாளங்களில் அமைத்து, வார்த்தைகள் சிதையாமல் அர்த்தம் புரிந்துகொண்டு பாடும்படி செய்தது.
3. பஜனை என்றால் என்ன? பஜனை என்பது எப்படி இருக்க வேண்டும் என்று பஜனைக்கு ஒரு இலக்கணம் அமைத்தது.
4. சங்கீதம், ராகம், தாளம் என்று எதுவுமே அறியாதவர்களையும் திருப்புகழ் பாட வைத்திருப்பது.
5. அவ்வாறு திருப்புகழ் பாடுபவர்களை, மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கும்படியான நிலைக்கு உயர்த்தியது.

6. அவ்வளவு திருப்புகழ் பாடல்களுக்கும் (திருப்புகழ் இசை வழிபாடு புத்தகத்தில் உள்ள) சந்தங்களையும், அங்க தாளங்களையும் தன் கைப்பட எழுதினது.
7. திருப்புகழ் நவ மணிகளிலிருந்து தகுந்த வரிகளை பொறுக்கி எடுத்து 'வள்ளி கல்யாணம்' என்ற மகத்தான தொகுப்பை தயாரித்து அதை எப்படிப் பாடவேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருப்பது.
8. புத்தகங்களுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று Committee meetingல் கேட்டு எல்லோரும் முழி முழியென முழித்து மவுனம் சாதித்த பொழுது 'திருப்புகழ் மதாணி', 'திருப்புகழ் இசை வழிபாடு', என்ற பெயர்களை மொழிந்தது.
9. திருப்புகழ் பாடல்களை ஒலி நாடாக்களில் பதிவு செய்து cassettes வெளியிட்டது.
10. அபிராமி அந்தாதி, அபிராமி அம்மைப் பதிகங்களைச் சொல்லிக் கொடுத்து ஒலி நாடாக்களில் பதிவு செய்து வெளியிட்டது.
11. திருப்புகழ் அன்பர்கள் அமைப்பை Register செய்தபொழுது அதற்குரிய எம்ப்ளம் தயார் செய்தது.
12. 1300 பாடல்களுக்கும் அரும் பத உரை தயார் செய்து 'திருப்புகழ் மதாணியில்' சேர்த்திருப்பது போன்ற இந்த அரிய காரியத்தை யார் செய்தார்கள் என்று குருஜியிடமே கேட்ட போது ஒரு புன்னகைதான் பதிலாக இருந்தது. அப்பொழுதுதான் புரிந்தது அவர்தான் அதைச் செய்திருக்கிறார் என்று.

இதோ அனுபந்தம்:—

குருஜி அவர்கள் 19-04-70ல் பரவைக்கெத்தனை என்ற பாடலையும், மனை மக்கள் என்ற பாடலையும் ஒரே நாளில் சொல்லிக்கொடுத்தார். இந்த இரண்டு பாடல்களையும் குருஜி சேர்த்துத்தான் பாடுவார். அதனை twin பாடல்கள் என்று கூறுவார்கள்.

முதல் முறையாக சரோஜினி நகர் பிள்ளையார் கோவிலில் குருஜி புய வகுப்பு பாடும்போது, அநாயாசமாக மிருதங்கத்தில் தாளம் போட்டுக் கொண்டிருந்த ஈஸ்வர ஐய்யருக்கு எண்ணிக்கை தவறி விட்டதனால் அப்படியே நிறுத்திவிட்டார். "ராகவா! இது என்ன அனுமார் வால் மாதிரி போயிண்டே இருக்கே" என்று கேட்டபோது ஏகம், திஸ்ரம் என்று ஆரம்பித்து சங்கீத பாஷையில் விளக்கிக் காட்டி எல்லோருடைய பாராட்டையும் பெற்றார் குருஜி அவர்கள். திருப்புகழ் இசை வழிபாடு புத்தகம் தயார் செய்யும் பொழுது இராகத்தை எழுதுவதில் சந்தேகம் வந்தது. ஏனென்றால் சில பாடல்களுக்கு இரண்டு இராகங்கள் இருந்தன. குருஜி இரண்டையும்தான் போட வேண்டும், மெயினாகப் பாடுவதை போட்டுவிட்டு மற்றதை பிராக்கெட்டில் போடு என்றதின் பேரில், என் சந்தேகமும் தீர்ந்து அதன்படியே இராகங்கள் புத்தகத்தில் இடம் பெற்றன.

குருஜி publicityக்காக எப்பொழுதும் அலைந்ததே இல்லை. சென்னை மியூசிக் அகாடமியில் "திருப்புகழ் சந்தங்களையும் தாளங்களையும்" பற்றி பேச (Lecture demonstration) அழைத்த பொழுது அவர் உடனே ஒத்துக்கொள்ளவில்லை. அவர்கள் இரண்டு மூன்று முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வற்புறுத்தியதின் பேரில்தான் வருவதற்கு ஒப்புக்கொண்டார்.

சில நிகழ்ச்சிகளை நினைத்தால் தமாஷாக இருக்கும். உதாரணத்திற்கு ஒன்று --- புய வகுப்பு சொல்லிக் கொடுத்த போது "மணிவட மழலை உடைமணி தபனிய நாண் அழகாக" என்று பாடும்போது "நாண்" என்ற வார்த்தையை அழுத்தம் திருத்தமாக உச்சரித்தேன். குருஜி அவர்கள் சிரித்துக் கொண்டே, "அப்பனே! அது வில்லோட நாண் இல்லை குழந்தை முருகனோட அரை நாண். அறுந்துபோய்விடும்" என்றார். நான் மனதில் சபாஷ் போட்டு, நகைச்சுவையும் தெரியுமா குருஜி என நினைத்துக்கொண்டேன்.

ஈஸ்வர ஐயர் விட்டில் ஒரு சஷ்டி பஜனையின் போது 'மறவர் நாயக' என்று ஆரபி ராகத்தில் சொல்லிவிட்டு என்னைப்பார்த்து பாடு என்றார். நானும் 'தறையின் மானுடர்' என்று ஆரம்பித்து முழு பாடலையும் பாடினேன். பேஷ் 100 மார்க் என்றார். நான் "குருஜி ஆயிரத்துக்கா?" என்றேன். பஜனை முடிந்த பிறகு சொன்னார், "நான் மறவர் நாயக என்று தானே ஆரம்பிச்சுக்கொடுத்தேன். அதுலேயிருந்து தானே மேலே பாடியிருக்கணும்?" என்றார்.

எவ்வளவோ பஜனைகளில் அவர் எமோஷனலாகிவிடுவார். மேலே பாடவே முடியாது. 13-2-72 கரோல்பாக் வகுப்பில் "பச்சையொண்கிரி" என்று தொடங்கும் பாடலை சொல்லிக் கொடுக்கும் பொழுது "இரு நாழி நெலால் அறம் எப்பொதும் பகிர்வாள் குமரா என உருகேனோ" என்று சொல்லிக் கொடுக்கும் பொழுது கிட்டத்தட்ட அவரால் பத்து நிமிடங்களுக்கு வாயையே திறக்க முடியவில்லை. (மனக்கண்ணில் என்ன காட்சியைக் கண்டாரோ தெரியவில்லை!)

குருஜி எந்த ஒரு முக்கியமான காரியத்தையும் செந்திலாண்டவன் உத்திரவில்லாமல் தொடங்கமாட்டார் என்பதை முன்பே குறிப்பிட்டிருந்தேன். ஒரு முறை எங்களுக்கு அபிராமியம்மைபதிகம் கற்றுத் தந்து அது பூர்த்தியாகும் தருவாயில் உமையே என்றுசொல்லி முடிப்பதற்கும், உமா என்ற சிறு பெண் தன் பெற்றோருடன் உள்ளே நுழைந்ததும் தெய்வச் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். கிட்டத்தட்ட நாற்பது வருடங்களில் அவர் கோபித்துக் கொண்டதே கிடையாது. ஆனால் ஒரே ஒரு முறை தான் திருப்புகழ் அன்பர்கள் அமைப்பை 1988ல் பதிவு செய்து அடுத்த மார்ச் financial year முடிந்து ஏப்ரல், மே, ஜுன் என்று நாட்களும் மாதங்களும் நகர்ந்து கொண்டிருந்தன. நான் அக்கௌண்ட்ஸை பார்க்கவேயில்லை. அதனால் குருஜி, "இந்த மாதிரி மச மசன்னு இருந்தா என்ன அர்த்தம்? எப்போ அக்கௌண்ட்ஸ் பார்த்து எப்போ AGM வெச்சுக்கிறது?" குரலில்

கோபம் தெரிந்தது. "குருஜி கவலைப்படாதேங்கோ. Finalise பண்ணிடலாம்" என்று சொல்லி சமாளித்தேன்.

அன்றே Chartered Accountant ராஜாமணியை தொடர்பு கொண்டு தினமும், ஐந்து ஆறு நாட்கள், அவருடைய வீட்டிற்கு இரவு ஏழு மணிக்குச் சென்று ராத்திரி இரண்டு மணி மூன்று மணிவரை வேலை செய்து, அடுத்த நாள் காலை என் வீடு திரும்பி வந்து Finalise பண்ணினோம். முதல் பாலன்ஸ் ஷீட் (Balance Sheet) என்பதால் ஏகப்பட்ட குழப்பங்கள். அன்றிலிருந்து வீட்டு வேலை, ஆபீஸ் வேலை எதுவாக இருந்தாலும் அதை ஒதுக்கி வைத்து விட்டு, அவர் சொன்னதை செய்துவிட்டுத்தான் மறுகாரியம் என்பதை நான் விரதமாகவே மேற் கொண்டேன்.

அதனோட effect "ராமு! உங்கிட்ட ஏதாவது காரியம் சொல்ல வேணும்னா பயமா இருக்கு" என்றார். "குருஜி ஏன் அப்படி சொல்றேள்?" என்றேன். "ஏதாவது சொன்னா, சொன்ன அடுத்த நிமிஷமே அதை பண்ணி முடிச்சுடறே. வேறே ஐடியா தோணி மாத்திப் பண்ணலாம்னா முடிய மாட்டேங்கறது".

அவருடைய டிரேட் மார்க்கான ஒரு புன்னகைதான் பதிலாகக் கொடுக்க முடிந்தது. நாமும் அவர் செய்யும் புன்னகை நினைவிலிருந்து மீளமுடியாது திண்டாடுகிறோம். ஆனால் அவர் சொல்லிக்கொடுத்த திருப்புகழ்தான் நம் கைவசம் இருக்கிறதே. அதில் அவர் புன்னகை முகத்தை கண்டு களித்து நம் வாழ்நாள் வரை இன்புறலாமே! இந்த சம்பாஷணைகள் முடிந்துவிட்டதே என்று இருக்கிறதா? ஒரு நல்ல படம் பார்த்த திருப்தி மனதில் பதிந்து விட்டது. அதை இனி அழிக்க முடியாது. எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துப் பார்க்கலாமே! இப்பொழுது மேலே செல்வோமா?

ஒவ்வொருவரின் அநுபவமும் வேறு வேறாக இருந்தால்தான் அதைக் கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் ருசியாகவும், சுவாரஸ்யமாகவும் இருக்கும். அந்த முறையில் மற்றுமொரு அன்பரின் அநுபவங்களைப் பார்க்கலாமா?

திருப்புகழ் பாடச் செய்த திருவிளையாடல் பற்றி திரு. என்.எஸ். மணி அவர்கள் என்ன சொல்கிறார் என்பதைக் காண்போம்.

### குருஜி மூலம் இறைவன் திருவிளையாடல்---

அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழின் மகிமையைத் திக்கெட்டும் பரவச்செய்யும் முயற்சியில் இயங்கிக்கொண்டிருக்கும் 'திருப்புகழ் அன்பர்கள்' என்ற குழுவில் அடியேன் இணைந்ததே, அந்த செந்திலாண்டவனின் விந்தையான ஒரு திருவிளையாடல்தான் என்று கூறலாம். "மதுராபுரேசர் மெய்க்க அரசாளும் மாறன் வெப்பு வளை கூனையே நிமிர்த்த தம்பிரானே!" என்று விராலிமலை திருப்புகழில் அருணகிரிநாதர் கூறுவார். மதுரையை அரசாண்ட மன்னர் கூன்பாண்டியனின் கூனை நிமிர்த்த, மதுரை சொக்க நாதரை வேண்டி ஒரு தேவாரம் பாடினார் திருஞான சம்பந்தர். தன் மீது உண்மையான பக்தி கொண்ட அந்த அடியாரின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து, சிவபெருமான் கூன் பாண்டியனின் கூனைக் குணப்படுத்தினார். இது சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களில் ஒன்று.

அடியேன் வாழ்க்கையிலும் முருகப்பெருமான் ஒரு திருவிளையாடலை நிகழ்த்தியுள்ளான். அது ஒரு சுவாரஸ்யமான நிகழ்வு என்றே சொல்ல வேண்டும். அப்போது நான் மும்பையில் ஒரு நிரந்தரப் பணியில் இருந்தேன். 1963ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஒரு விடுமுறையில் தில்லியிலிருந்த என் மூத்த சகோதரி வீட்டுக்கு வந்தேன். குருஜி நடத்தும் திருப்புகழ் வகுப்பு கரோல்பாக்கில் நடப்பதை அறிந்து ஆவலுடன் அங்கு சென்றேன். சங்கீதம் தெரிந்த இருபது மாணவர்களைக் கொண்ட வகுப்பு அது (மாணவிகள் பிற்காலத்தில்தான் சேர்க்கப்பட்டனர்). நான் சென்ற போது "உடுக்கத் துகில் வேணும்" என்ற பாடலை காம்போதி ராகத்தில் பாடிக்கொண்டிருந்தனர். இறுதியில் குருஜியிடம் எல்லோரும் விடைபெற்றுச் சென்ற பின் நான் அவரை நமஸ்கரித்து, "நானும் இந்த வகுப்பில் சேர்ந்து கொள்ளலாமா?" என்று கேட்டேன். "ஓ! பேஷாக!" என்று மகிழ்வோடு சொன்னவர் என் பெயர், ஊர் ஆகிய விவரங்களை விசாரித்தார். என் பெயர் சுப்பிரமணியன் என்றும், எனக்கு சொந்த ஊர் திருநெல்வேலியில் களக்காடு கிராமம் என்றும் சொன்னேன். மிகுந்த கனிவுடன், "அடுத்த வாரத்திலிருந்து வாயேன்" என்றார். நானும் பேரானந்தத்துடன் விடை பெற்றுக்கொண்டு வந்து விட்டேன். வீட்டுக்கு வந்த பிறகுதான் சுய நினைவுக்கு வந்தவன் போல "ஆ! அடுத்த வாரம் விடு முறை இல்லையே! மும்பைக்குச் செல்ல வேண்டுமே!" என்ற நினைவே வந்தது. இதை என் அக்கா மற்றும் என் அத்திம்பேரிடம் சொன்ன போது எனக்கு டெல்லியிலேயே ஒரு உத்தியோகம் பார்த்துத் தருவதாக அத்திம்பேர் சொன்னதோடு மட்டுமல்லாமல், சொன்னது போலவே மறு நாளே என்னை ஒரு பணியிடத்தில் அமர்த்தியும் விட்டார்.

அடியவர்கள் இச்சையில் எவை எவை உற்றன அவை அவை தருவித்தருள் பெருமான், எனக்கு அவன் திருப்புகழ் பாட ஏற்படுத்திக் கொடுத்த பெரும் வாய்ப்பு அது. குருஜி அடுத்த வாரத்திலிருந்தே வரச் சொன்னதும் அவருடைய அந்த வாக்கை மெய்ப்படுத்த வேண்டி செந்திலாண்டவன் செய்த திருவிளையாடல்தான் இது என்றே எனக்குத் தோன்றியது. என்னே ஆண்டவன் அருள்! வியக்காமல் இருக்க முடியவில்லை. இதுதான் குருஜியின் பெருமை.

முருகன் குருஜியிடம் இவன் இங்குதான் இருக்கப்போகிறான் அதனால் அடுத்த வகுப்புக்கு வரச்சொல் என்று சொன்னானோ?

குருஜி, அவருள் பொங்கி வழிந்து கொண்டிருந்த ஆன்மீக சக்தியை வெளியில் காட்டிக் கொண்டதில்லை என்பதை உறுதிபடுத்தும் இரு சம்பவங்களையும் இத்தருணத்தில் குறிப்பிட நினைக்கிறேன்.

அருணகிரிநாதர் ஜெயந்தி விழாவை 1960-70களில் திருவண்ணாமலை ஆலய வளாகத்தில் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி கொண்டாடி வந்தனர் திருப்புகழ் அருளாளர்கள். அவர்களுள் முக்கியமானோர், நஞ்சங்கூடு டாக்டர் மணி அவர்கள்,

டாக்டர் முத்துசுவாமி ஐயர் அவர்கள், திரு. எஸ். நடராஜன் அவர்கள், மதிப்பிற்குரிய பித்துக்குளி முருகதாஸ் அவர்கள், ஸ்ரீமான் ஆதிசேஷ ஐயர் அவர்கள் ஆவர். அழைப்பின் பேரில், டெல்லியிலிருந்து குருஜி அவர்கள் தலைமையில் நாங்கள் சுமார் பதினைந்து அன்பர்கள் 1966, 1967, 1968 ஆண்டுகளில் கலந்து கொண்டு திருப்புகழ் இசை வழிபாடுகள் செய்தோம். இந்த வைபவத்தை மையமாகக் கொண்டு நாங்கள் முருகனின் ஆறுபடை வீடுகள், பஞ்சபூதத் தலங்கள், மற்றும் இடைப்பட்ட முருக ஷேத்ரங்களை தரிசித்தும் வந்தோம். 1968ஆம் ஆண்டு பயணத்தில் நடந்த இரண்டு மறக்க முடியாத அதிசயிக்கத்தக்க சம்பவங்கள் என் மனதில் ஓடியது.

ஸ்ரீமான் ஆதிசேஷ ஐயர் (பிற்காலத்தில் இவர் சன்னியாசம் தரித்து குஹானந்த பாரதி எனும் நாம கரணத்துடன் சேலத்தில் வாழ்ந்து முத்தி அடைந்தார். இவர் பாடல் புனைவதில் வல்லவர். அவர் இயற்றிய பாடல்களே, ஞானப்பழத்தைப் பிழிந்து, வெண்ணீரணிந்ததென்ன? வேலைப்பிடித்ததென்ன?, என்ன கவி பாடினாலும் உந்தன் மனம் இரங்கவில்லை போன்றவை. நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை இவர் இயற்றியுள்ளார். எல்லோருடைய பெருமதிப்பிற்குரியவர்) தமது ஊரான ஆனையம்பட்டியில் அவருடைய வீட்டில் நமது குருஜியை அழைத்து ஒரு திருப்புகழ் இசை வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த ஊர் கடந்த இரு வருடங்களாக மழையையே பார்க்காத வரண்ட ஊர். நாங்கள் சென்றிருந்த போது கூட பகலில் கடுமையான வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. கிணறுகளில் நீர் இல்லை. அதள பாதாளத்தில் கிடைத்த அரைவாளி தண்ணீரை மொண்டு எடுத்து கை கால்களை நனைத்துக் கொண்டோம். மாலை ஏழுமணி அளவில் திருப்புகழ் இசை வழிபாடு தொடங்கியது. குருஜி தன்னை மறந்து ஆழ்ந்த பக்திப் பரவசத்தில் பாடிக்கொண்டிருந்தார். இரவில் ஒன்பது மணி அளவில் குளிர்ந்த காற்று வீசியது. அரை மணி நேரத்தில் மழைத் தூரல். பின்னர் நல்ல மழை பெய்தது. நாங்கள் முற்றத்திலிருந்து வீட்டிற்குள் செல்ல வேண்டிய நிலை. மறு நாள் காலையில் அருகில் இருந்த ஆற்றில் தண்ணீர் வந்தது. அந்த சிற்றூர் மக்களுக்கு இது ஓர் வியப்பு. ஏனெனில் ஸ்ரீமான் ஆதிசேஷ ஐயர் அவர்கள் - குருஜியின் திருப்புகழ் இசையால் இன்று மழை கொட்டும். இல்லையேல் நான் பக்தி செய்வதை நிறுத்திவிடுவேன் என்று அந்த ஊர் மக்களிடம் சொல்லி இருந்திருக்கிறார். இந்தச் சம்பவம் - நினைத்ததும் அளிக்கும் மனத்தையும் உருக்கும் நிசிக்கருவறுக்கும் பிறவாமல் நெருப்பையும் எரிக்கும் பொருப்பையும் இடிக்கும் நிறைப்புகழ் - எனும் நமது பரம குரு நாதரின் வாக்கை உறுதிப்படுத்துகிறது.

என்னே குருஜியின் பெருமை !!!

நினைக்க நினைக்க ஆனந்தமாக இருக்கிறது.

பின்னர் ஆனையம்பட்டியிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்று ஒரு அன்பர் வீட்டில் இசைவழிபாடு செய்து விட்டு திருச்செந்தூர் செல்வதாக ஏற்பாடாகி இருந்தது. அதன்படி இசை வழிபாடு முடித்துக் கொண்டு திருச்செந்தூர் செல்லுகையில் பத்து கிமீ சென்றபின், தனது சூட்கேஸ் அன்பர் வீட்டில் தங்கி விட்டதை திடீரென குருஜி முதன் முறையாக உணர்ந்தார். இசை வழிபாட்டின் போதே அவர் மனம் சரியில்லாமல் இருந்ததை நாங்கள் உணர்ந்திருந்தோம். எங்களை திருச்செந்தூருக்குச் செல்லப் பணித்துவிட்டு அவர் மட்டும் திரும்பித் தன் சூட்கேசை எடுத்து வரச் சென்றார். நாங்கள் திருச்செந்தூர் வந்த போது இரவு மணி பதினொன்று. எங்களால் நாங்கள் போட்டிருந்த பிளான் படி அர்த்த ஜாம பூஜையைப் பார்க்க இயலவில்லை. இதுவே முதன் முறையாக நடந்த அசம்பாவிதம். மறு நாள் காலையில், குருஜியோடு சேர்ந்து ஐந்து மணியிலிருந்து வரிசையாக இறைவன் தரிசனம். எல்லா பூஜைகளிலும் கலந்து கொண்டு செந்திலாண்டவனைத் தரிசித்தோம். அங்கிருந்த பெரியவர், மூக்கண்ண பாகவதர், சண்முக விலாசத்தில் திருப்புகழ் இசை வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தார். காலை பத்து மணிக்குத் தொடங்கி பன்னிரண்டு மணி வரை பாடினோம். சுமார் பதினொன்றரை மணியளவில் அன்பர் ஒருவர் வந்து குருஜியின் பின்னால் அமர்ந்திருந்த என்னிடம், காதோடு காதாக, டெல்லியில் குருஜியின் அம்மா நேற்றிரவு தவறிவிட்டார்கள் என்கிற செய்தியைச் சொன்னார். அப்போது குருஜி தன்னை மறந்த நிலையில் ஷண்முகரைத் தரிசித்துக் கொண்டு பாடிய நிலையில் இருந்தார். இசை வழிபாடு முடிந்து சாப்பாடு ஆகும் வரை இந்தச் செய்தியை நாங்கள் அவரிடம் சொல்லவில்லை. முந்தின நாள் இரவில் குருஜி முதன் முறையாக பஜனையிலும், பின் சூட்கேசை மறந்தும் மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில் தான் டெல்லியில் குருஜியின் தாயாரின் முத்தி நடந்திருக்கிறது என்பதனை உணர்ந்தோம். உடனே குருஜி தமது சகோதரியின் கணவருடன் சென்னை வந்து பின் டெல்லி சென்று விட்டார். எங்களுக்கு குருஜியின் உத்தரவின்படி மேற்கொண்டு பாப நாசம் வழியாக பழநி மற்ற தலங்களைத் தரிசித்து வர வேண்டும் என்று இருந்தது. முதல் நாள் இரவே குருஜிக்கு டெல்லியில் நடந்த செய்தியின் அறிகுறி கிடைத்திருக்க வேண்டும் என்பது எங்கள் எண்ணம். இதுவும் நமது குருஜிக்குப் பெருமை சேர்க்கும் அவருடைய ஆன்மீக சக்தியின் பலத்தை நம்மை உணர வைக்கும் ஓர் சம்பவமே என்று கூடச் சொல்லலாம்.

திருப்புகழை பல விதங்களில் முயற்சி செய்து பரப்பிவரும் திரு. என். எஸ். மணி அவர்களை அடுத்து தில்லி திருமதி பத்மா சுப்ரமணியத்தின் அனுபவம் என்ன சொல்கிறது என்பதை நோக்கலாம்.

குருஜி காட்டிய பாதையில் பயணித்த தன் அனுபவங்கள் என்ன என்பதை பத்மா சுப்ரமணியன் விளக்குகிறார் -- இதோ

### நல்வழிப்பாதையில் நடை பழகக் கற்றுக் கொடுத்த குருஜி----

முதன் முதலில் 1978 ல் லக்னோவில் நாங்கள் இருக்கும் சமயம் குருஜியும் சில அன்பர்களும் தைப்பூசத் திருவிழாவிற்கு வந்தார்கள். அவரை எனக்குக் கைகாட்டிக்கொடுத்த காலஞ்சென்ற நாராயணன் மாமாவுக்கு எத்தனை நன்றி சொன்னாலும் போதாது. குருஜி திருப்புகழ் கற்பிக்கக் காரணமாக இருந்தவரும் இவரே.

பாடறியேன், படிப்பறியேன், ஏடறியேன், எழுத்தறியேன், என்றிருந்த என்னை 1989-ல் தில்லியில் நடந்த மகோத்ஸவத்தின் போது, பற்பல சிறு பணிகளில் ஈடுபடுத்தினார். பிற்காலத்தில் அது என்னை முக்கியமான அங்கத்தினராகத் தகுதி பெறச் செய்தது. அந்த குரு அருள் தான் வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்தது. அந்த நிகழ்வுகளை நினைத்தாலே குருஜியின் முகம் தான் முன் நிற்கின்றது.

அவர் கீழே இருபத்தியோரு வருடங்கள் திருப்புகழ் அன்பர்கள் அமைப்பின் செயலாளராகப் பணிபுரியும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் (ஒன்பது வருஷங்கள் துணை செயலாளர்). எந்த வேலை செய்தாலும் ஒரு ஒழுங்கு முறை இருக்க வேண்டும் என்பதை நான் கற்றுக்கொண்டேன். ஒரு முடிவு எடுக்க நேர்ந்தால் அதனால் வரக்கூடிய விளைவுகளை ஆராய்ந்து அதற்குத் தக்கன செயல்பட வேண்டும் என்பதைப் பலசந்தர்ப்பங்களில் புரிய வைத்தார் குருஜி. எல்லாவற்றிற்கும் மேலாக பொறுமை --- "பொறுமையாக இருப்பது மிகவும் கடினம். அதிலும் தலைமை ஏற்றபிறகு இன்னும் கஷ்டம். ஆனால் எந்த நிலையிலும் யார் என்ன சொன்னாலும் இது எனக்கு இல்லை என்று இரு" என்று அறிவுறுத்துவார் குருஜி அவர்கள். செயலாளர் பதவிக்கு என்னை தேர்ந்தெடுத்தபோது "ஏன் அப்படிச் செய்தீர்கள்? அதற்கு நான் தகுதியா?" என்று கேட்டதற்கு, "முருகன் உன்னைக் காட்டினான் .அதன்படி செய்தேன்" என்றார். இதே பதில் தான் பிறகு வந்த தேர்ந்தெடுப்புகளிலும் தொடர்ந்தது.

"ஆண்டவன் செய்ய வைக்கிறான். நான் செய்கிறேன் என்பதை விட்டு விடு முருகன் பார்த்துக்கொள்வான்" என்பார். அடிக்கடி அவர் என்னிடம் சொன்னது, "முருகன் உன்னிடத்தில் இருக்கிறான் என்பதைப் புரிந்துகொள். அதன்படி செயல்படு" என்பது தான். மனது நொந்து போன சமயங்களில் தெம்பு தரும் ஔஷதம் வேறு என்னவாக இருக்க முடியும்? ஒரு ரிபோர்ட் எழுதி அவர் பார்வைக்கு அனுப்பினால், "செந்திலாண்டவன் உன்னை ஆசீர்வதித்து இவ்வளவு அழகாக எழுதத் துணை புரிந்திருக்கிறான். கையைப்பிடித்து எழுத வைத்திருக்கிறான்" என்று எழுதினார். அவருடைய பல கடிதங்களையும் ஒரு பொக்கிஷமாக இன்றும் வைத்திருக்கிறேன்.

தில்லி தமிழ்சங்கம் குருஜியை கௌரவிக்க எண்ணி அணுகியபோது அவருக்கு போன் செய்து கேட்டேன். தான் வர இயலாத நிலையில் இருப்பதால் அவர் சார்பில் அதை என்னை பெறச் சொன்னார்.

ஒரு வருஷம், விஜயதசமிக்கு முதல் நாள், ஒரு அன்பரின் விட்டுக் கல்யாணம். சங்கர வித்யா கேந்திரத்தில். ஒருபக்கமாக குருஜி சற்றே சோர்வாக அமர்ந்திருந்தார். போய் கேட்டதற்கு "ஆண்டவன் இதுவரை ஒரு பாட்டையும் தோன்ற வைக்கவில்லை" என்றார். ஆனால் மறு நாள் "வேதத்தில் கேள்வி இலாதது" என்ற ஸ்ரீரஞ்சனி ராக பாட்டை மிக அருமையாகச் சொல்லிக் கொடுத்தார்.

2013 ஆம் ஆண்டு படி விழா டெல்லியில் --- வழக்கம் போல் அவருடன் தொடர்பு கொண்டு ஆசி பெற முயன்றேன். ஆனால் அங்கிருந்து பதில் இல்லை. படிகளில் நின்று பாடிக்கொண்டிருக்கும்போது (ஓருருவாகிய பாடல்), அவர் போனில் அழைத்து ஆசிகளைக் கூறினார். அந்தக் கடுங்குளிரில் அந்த வார்த்தைகள் கதகதப்பான இதத்தைத் தந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

நிறைய சந்தர்ப்பங்களில் சில பேர்கள் சார்பில் அவரிடம் வாதாடியிருக்கிறேன். ஆனால் பின்னர் அவர் சொன்னதுதான் சரியாக இருந்திருக்கும். மனிதர்களை எடை போடுவதில் அவருக்கு நிகர் இல்லை என்பதை புரிந்துகொண்டேன். ரயில் பயணங்கள் பல அவரோடு மேற்கொண்டிருக்கிறேன். எந்த ஒரு அசௌகரியத்தையும் பொருட்படுத்தாமல் இருப்பார்.

2008 ஆம் ஆண்டு பங்களூரில் நடந்த கோல்டென் ஜூபிலீ விழாவின் போது அவர் கூடவே இருந்து செயல்பட்டபோது கற்றுக்கொண்டவை ஏராளம். எழுதிக்கொண்டே போகலாம்.

மொத்தத்தில் அவர் என் மனதில் விதைத்த விதைகள், துளிர் விட்டு மேலும் மேலும் வளர்ந்து, வாழ்க்கை முறையே அதனால் ஆளப்பட்டு, எண்ணங்கள், செயல்கள் எல்லாம் ஆண்டவன் இட்ட பிச்சை என்ற உணர்வை என்னில் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த குருவருளுக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.

பிப்ரவரி 1997ல் மயூர் விஹாரில் திருப்புகழ் வகுப்பு நடத்துமாறு என்னைப் பணித்தார். அவ்வகுப்புகள் 2018 ஜனவரியில் நான் சென்னைக்கு இடமாற்றம் செய்யும்வரை செவ்வனே நடந்தது. இவைகளை எல்லாம் நினைத்து அசை போடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அதிலும் ஒரு சுவை இருக்கத்தான் செய்கிறது. வாழ்க குருஜியின் தொண்டு வளர்க அவர் இட்ட பணி.

மேற்கண்ட அநுபங்களில் திளைத்திருக்கும்போது திருமதி உமா பாலசுப்ரமணியனின் அநுபவங்களும் சொல்லத் துடிக்க முன்னே வருகின்றது. அதையும் தான் நாம் பார்த்துவிடலாமே!

**வருவதைக் காணும் அன்பு குருஜி ---**

முருகா சரணம். குருஜியைப்பற்றி பல பேருக்கு பல அநுபவங்கள் ஏற்பட்டிருப்பது கண்டு உள்ளம் குதிபோட்டு மகிழ்ச்சியாக இருக்கிறது. என் தந்தை வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களைத் தமிழ் உலகம் அறியாமல் இருந்திருக்க முடியாது. அப்படிப்பட்டவர் குருஜியின் பஜனை எங்கு நடந்தாலும் தன் வேலைகளைத் தள்ளி வைத்து விட்டு அங்கு சென்று, எதிரில் உட்கார்ந்துகொண்டு தவம் செய்வதைத்தான் நான் பார்த்திருக்கிறேன். கண்ணை மூடி, தாரை தாரையாக வழியும் நீரைகூடத் துடைத்துக் கொள்ளாது ஓம் என்று தொடங்கி பஜனை முடியும் வரை கண்ணைத் திறவாது பாடலில் கருத்தை வைத்து உட்கார்ந்து கொள்வதைக்கண்டு வியந்திருக்கிறேன். அது ஒருவிதமான இனம் புரியாத இன்பத் தவம். குருஜியின் குரலின் ஈர்ப்பும், அவர் திருப்புகழ் பாடலுக்கு ஏற்ப பாடும் விருத்தங்களும் யாவருக்குமே முருகனை முன்னால் நிறுத்திவிடும். அதிகம் வெளியில் பேசாது கண்ணாலேயே பேசும் அந்த இருவருக்கும் அப்படி ஒரு பிணைப்பு. இனம் இனத்தோடுதானே சேரும்.

எனக்கு குருஜி சொல்லிக்கொடுத்தது ஒன்று, அதை வெகு நாட்களாகக் கடை பிடித்தேன். "நான் பஜனைகளில் எப்படிப்பாடுகிறேன் என்று கவனமாகக் கேள். நுணுக்கங்கள் யாவையும் தெரிந்து கொள். அது பிற்காலத்தில் உனக்கு உபயோகமாக இருக்கும்" என்பார். உண்மைதான். அவரை நான் மிகவும் மிஸ் செய்கிறேன். வகுப்பில் யாராவது தவறாகப்பாடினால் திட்டு எனக்குத்தான். கவிதை எழுதும் பழக்கம் எனக்கு இருப்பதால் எப்பொழுதாவது அவர் என்னைக்குறித்து ஏதாவது சொன்னால் அவரைப்பற்றி (வருத்தம்) கவிதை எழுதி அவர் கையில் கொடுத்துவிடுவேன். அவர் அதை வீட்டிற்குக் கொண்டுபோய் படித்துவிட்டு, "அம்மா தாயே! இனிமேல் உன்னை ஒன்றுமே சொல்ல மாட்டேன். மற்றவர்களைச் சொன்னால் அவர்களுக்குக் கோபம் வரும். உன்னை வெகு நாட்களாக எனக்கு நன்றாகத் தெரியுமே நீ கோபித்துக் கொள்ள மாட்டாய் என்று நினைத்தேன்!" என்பார். மேலும் தொடர்ந்தார் "இதுவரை எனக்கு நாலைந்து கடிதங்கள் எழுதிவிட்டாய். கடிதங்கள் பெற்றுக்கொள்ளும் வயதா? (ஜோக்) உன் கவிதை நயத்தை பாராட்டுகிறேன். என் உம்மாச்சி இப்படி எழுதியிருக்கிறாளே என்று (உமா ஜீயை இப்படித்தான் கூப்பிடுவார்). "சரி இதை எங்கேனும் பப்லிஷ் செய்துவிடாதே, என் மானம் போகும்", என்று விளையாட்டாகச் சொல்லிச் சிரிப்பார். நாங்கள் இருவரும் அநேகம் முறை வாதம் தான் செய்திருக்கிறோம். எல்லாம் ஒரு விளையாட்டுதான். இப்படி எத்தனையோ தருணங்கள், எவ்வளவோ சந்தேகங்கள், எத்தனையோ கேலிகள், எத்தனையோ விளையாட்டுக்கள், எத்தனையோ தனிப்பட்ட விஷயங்களின் பரிமாறல்கள், எத்தனை? எத்தனை? என்று நான் மனதில் கேட்டு அழுகிறேன். அவர் முதன் முதலில் தடி கொண்டு வரும் நேரம் "குருஜி நீங்கள் ஒரு தடியன்" என்றும் பை கொண்டு வந்தால் "குருஜி நீங்கள் பையனாகி விட்டீர்கள்"

என்றும் அவரை எத்தனை கேலிகள் செய்திருக்கிறேன். யாவற்றிற்கும் ஒரே பதில் சிரிப்பு. பொறுமை.

75 திருப்புகழ் பாடல்களுக்கு திருமதி லக்ஷ்மி ராமசாமியை வைத்துக்கொண்டு NOTATION எழுதினோம். முதலில் திரு. ரங்கனாதன் மாமா முருகன் FONT தயாரித்து கம்ப்யூட்டரில் எனக்குக் கற்றுக்கொடுத்து, அந்த வேலையை நான் சரிவர மேற்கொண்டேன். அப்பொழுது வீட்டிற்கு அநேகம் முறை வந்து பாடல் இப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் கூறி, பர்ஸனலாகவும் பேசுவார் குருஜி. அப்பொழுது ஒரு தந்தை நிலையில் இருந்து, "உனக்கு உதவி செய்ய ரெண்டு பேரை வைத்துக்கொள். அவர்களுக்கு டிபன், காபி எல்லாம் கொடு அதற்குரிய பில்லை என்னிடம் கொடு" என்பார். நான் கடைசிவரை அப்படிச் செய்யவில்லை. கம்ப்யூட்டரில் பதிவு செய்து, பிரதிகள் எடுத்து, ப்ரிண்டிற்குக் கொடுத்து புத்தகமும் ஆனந்தா தியேட்டர் மண்டபமாக மாறிய போது வெளி வந்தது. அந்தப் புத்தகம் வெளி வரும் வரை வீட்டிற்கு வந்து எல்லா பரிமாணங்களிலும் என்னை விசாரித்து, அவர் நடந்து கொண்ட விதம், குருஜி எல்லோரிடத்திலும் வைத்திருக்கும் பிரியத்தை நினைத்து அவரிடம் எனக்கு மதிப்பு கூடியதைக் கண்டு இன்பமடைந்ததைத் தவிர என்னவாக இருக்க முடியும்? இப்படி எவ்வளவோ! இப்பொழுது அதை நினைத்து பெரு மூச்சுதான் விடமுடியும்.

கடைசிகாலத்தில் அவரைப்பார்க்கச் சென்றபோது, அவரால் பேச முடியவில்லை. என்னுள் ஏதோ ஒரு உள்ளுணர்வு இது தகாதது என்று சொல்லிற்று.

"குருஜி விசாக பஜனைக்கு வரவேண்டும்" என்று நானும் மோகனும் (E.N.Murthy) கத்தினோம். அவர் மாட்டேன் என்று தலையை ஆட்டினார். பாவமாக இருந்தது. "வருவேன் என்று சொன்னால்தான் இந்த இடத்தை விட்டுப்போவேன்" என்றேன். "சரி வரேன்" என்று குரல் முடியாமல் கூறினார். வந்தாரா? அதுதான் இல்லையே! அவருக்குத் தெரிந்தது எனக்குத் தெரியவில்லையே! அதுதான் குருஜி! அவர் அருவமாக இருந்து நம்மை ஆசீர்வதிக்கிறார்.

கண்ணில் விழும் நீரைத் துடைத்துக்கொண்டு அடுத்து பங்களூரில் வசிக்கும் திரு. பாலாஜி அவர்களின் அநுபவத்தை பார்க்கலாமா?

குருஜியின் வாக்கு பலிதம் அவர் மூலமாக என்ன சொல்கிறது என்பதைப் பார்க்கலாம்.

### குருஜியின் வாக்கு பலிதம் -

சில வருடங்களுக்கு அடியேன் ஹைதராபாத்தில் கணக்காய்வுத் தலைவர் (Accountant General) அலுவலகத்திலிருந்து வேலையிலிருந்து ஓய்வு பெற்றேன். ஓய்வு பெற்ற சில நாட்களில் அடியேனுக்கு 'ஷஷ்டி அப்தபூர்த்தி' நடத்தத் திட்டமிட்டிருந்தார்கள். அந்த முகூர்த்தத்திற்கு குருஜி எனக்கும் என் துணைவியாருக்கும் முகூர்த்த வேஷ்டி புடவை தந்து அவர் அளித்த

ஆடைகளிலேயே எங்கள் இருவரையும் நமஸ்காரம் செய்ய அவர் இல்லத்திற்கு வரப் பணித்தார். ஷஷ்டி அப்த பூர்த்தியின் சில நாட்கள் முன்பே அடியேன் மகனுக்கு திருமணம் நிச்சயமாகியிருந்தது. ஷஷ்டி அப்த பூர்த்தி அன்றைய நாள் நல்ல முகூர்த்த நாளாக அமைந்ததால், நாங்கள் எங்கள் வரப்போகும் மருமகளுக்கு கூரை, திருமாங்கல்யம் வாங்கி முடித்து, குருஜி இல்லத்தை அடையும் போது இரவு மணி பத்து இருக்கும். குருஜி சிவப்பழமாக ஹாலில் அமர்ந்திருந்தார். முதலில் கூரை, திருமாங்கல்யத்தை முருகனிடம் வைத்து நமஸ்காரம் செய்துவிட்டு வரப் பணித்தார். நாங்கள் நமஸ்காரம் செய்தபோது குருஜி, "உனக்கு சீக்கிரம் பதவி உயர்வு கிடைக்கும்" என ஆசீர்வதித்தார். அடியேன் குருஜியிடம் "குருஜி நான் பதவி ஓய்வு பெற்றாகி விட்டது. இனிமேல் ஏது குருஜி பதவி உயர்வு?" என்று கேட்டபோது அவர், "நான் எங்கே சொல்கிறேன்? முருகன் சொல்ல வைக்கின்றான். நீ பார்த்துக்கொண்டே இரு" என்றார். அதன்பின்பு நாங்கள் ஹைதராபாத் திரும்பினோம். நாங்கள் ஹைதராபாத் திரும்பிய சில நாட்களில் உருது பல்கலைக்கழகத் துணை வேந்தர் என்னைப் பல்கலைக்கழகத்தின் நிதிப் பிரிவுக்கு பொறுப்பு ஏற்க சம்மதமா? என வினவினார். நான் சம்மதித்தவுடன் என்னை பல்கலைக் கழகத்தின் "நிதிப் பொறுப்பாளர்" (Finance Officer) பதவிக்கு நேர்காணல் மூலமாக நியமித்தார். இந்தப் பதவி நான் முன்பு கணக்காயர் அலுவலகத்தில் வகித்த பதவியைவிட உயர்ந்தது. பின்பு குருஜியை சென்னையில் சந்தித்து ஆசிகள் பெற்ற போது குருஜி, "பார்! நானாகச் சொல்லவில்லை, அவன் என்னை அப்படி ஆசீர்வதிக்கக் கூறினான். நானும் ஆசீர்வதித்தேன்" என்றார். என்னே அவரது தெய்வீகம்? என்னே அவரது வாக்கு பலிதம்?

இவ்வாறு குருஜியின் வாக்கு பலிதத்தைக் கண்டோமல்லவா? மற்றுமொரு அன்பர் அவர் வாக்கு வலிமையைப்பற்றி என்ன எழுதுகிறார் என்பதை ஊன்றிப் பார்ப்போம். திருப்புகழின் சக்தி, குருஜியின் வாக்கு வலிமை, இவை பற்றி என்ன எழுதுகிறார் ஐயப்பன் அவர்கள் என்று பார்க்கலாமா?

### குருஜியின் வாக்கு வலிமை ----

அன்று 09-04-1993, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் ஆலயத்தில் காலை ஒன்பது மணிக்கு திருப்புகழ் இசை வழிபாடு ஏற்பாடு ஆகி உள்ளது. குருஜி டெல்லியில் இருந்து வந்திருக்கிறார். பம்பாயிலிருந்து அன்பர்கள் வந்துள்ளனர். கல்பாக்கத்திலிருந்து அடியேன் குடும்பதோடு வந்துள்ளேன். அன்பர் குப்புசாமி எப்படி இருக்கிறார் என வினவியபோது அன்றோடு மருத்துவர்கள் கொடுத்த கெடு முடியப்போகிறது என்கின்றனர் பம்பாய் அன்பர்கள். குப்புசாமிக்கு கடந்த மூன்று மாதங்களாக உடல் நலக்குறைவு ஏற்பட்டு படிப்படியாக மோசமடைந்து அது கவலைக்கிடமாகி மருத்துவர்கள் கெடு கொடுத்து விட்டார்கள். அவர் உடலில் உள்ள ரத்தம் பூராவும் விஷமாகி விட்டது. அப்படி ஓர் வியாதி. குப்புசாமியை

காலனிடத்துக் கொடுக்க அடியேனுக்கும் மற்றும் யாருக்குமே மனமில்லை. அப்படிப்பட்டது எங்கள் நட்பு எனும் பிணைப்பு.

இசை வழிபாடு ஆரம்பமாகிறது. குருஜிக்கு இந்த விஷயம் தெரியுமோ? தெரியாதோ? எனும் நிலையில் அடியேன் ஒரு காகிதத்தில் "குப்புசாமிக்கு டாக்டர்கள் கொடுத்துள்ள கெடு இன்றோடு முடிவடைகிறது. அவரை இழக்க நமக்கு முடியாது. அவரை எண்ணி முருகனை வேண்டுவோம்", என எழுதி குருஜிக்கு அனுப்புகிறேன். அந்த பஜனையில் முருகனிடம் அடியேன் மனம் உருகி அளவுக்கு அதிகமாக மன்றாடுகிறேன். அதைவிட நமது குருஜி முருகனிடம் மன்றாடிப் பாடுகிறார். காம்போதி ராகத்தில் "கதிதனை" எனும் கந்தர் அலங்காரம் விருத்தமாக, செந்தில் திருப்புகழ் "அறிவழிய" பாடினார். அன்று அவர் மன நிலை வார்த்தைகளால் விவரிக்க இயலாத நிலை. பஜனை முடிந்தது. அடியேன் அவரிடம் விபூதி வாங்கச் செல்கிறேன். விபூதியை அடியேனிடம் கொடுத்து விட்டு குருஜி அடியேனை நோக்கிச் சொன்னது, "குப்புசாமி பிழைத்து விடுவார். முருகன், டாக்டர்கள் மனதில் புகுந்து நல்ல மருந்துகளைக் கொடுக்க வைத்து அவரை உயிர் பிழைக்கச் செய்து விடுவார்கள், நீ பயப்படாதே" என்றார். அவர் கொடுத்த வாக்கு பலித்தது. படிப்படியாக குப்புசாமியின் உடல் நலம் முன்னேறியது. இன்று அவர் நம்மைப்போல் இருக்கிறார். ஆச்சரியம்தான்.

செந்திலாண்டவனைத் தரிசிக்கச் செல்லுங்கால் அடியேன் அவருடன் நான்கு தடவை சென்றது முற்பிறவியில் செய்த புண்ணியம்தான். அன்போடு அருகில் அமர வைத்து உபதேசம் செய்வார். ஆலயத்தில் தக்ஷிணாமூர்த்தி சன்னதி முன் அமர்ந்து திருப்புகழ் பாடுவார். அவ்வமயம் செந்தில் அன்பர் கணேஷ்குமாரின் அப்பா ப்ரம்மஸ்ரீ கயிலை மணி ஸ்ரீமுத்து சுப்ரமண்யன் அவர்கள் மற்றும் சில அன்பர்களுடன் வந்திருந்து குருஜி பாடக் கேட்டனர். சுமார் மூன்று மணி நேரத்திற்கும் மேல் பாடினார். சேவார்த்தி ஒருவரின் மூன்று வயது ஆண் குழந்தை இவர் மடியில் அமர்ந்து கொண்டு திருப்புகழ் கேட்டது மறக்க முடியாத ஓர் காட்சி. "துன்பங்கொண்டு" எனும் திருப்புகழை செந்திலாண்டவன் அவன் சன்னதில் வைத்துத் தான் சொல்லிக் கொடுத்தான் என அவர் அடியேனிடம் சொன்னார். ஒரு தடவை நமது குருஜி செந்திலாண்டவன் சன்னதியில் மணியடியில் (வீரபாகுத்தேவனின் இடது புறம்) இருந்து தொழுதார். அப்போது ஒரு குருக்கள் அவரை அங்கு நிற்க விடாமல் போங்கள் போங்கள் என சொல்லி தள்ளி விட்டார். அதற்கு மறு வருடம் சென்றபோது அதே குருக்கள் குருஜியை அடையாளம் தெரிந்து கொண்டு அவரை அதே இடத்தில் நிற்க வைத்து பாடுங்கள், பாடுங்கள் என்றார். நமது குருஜியும் சிம்மேந்திரமத்தியம ராகத்தில் "மைவரும் கண்டத்தர்" அலங்கார விருத்தம் பாடி செந்தில் திருப்புகழ் "பஞ்ச பாதக" பகவானுக்குப் பாடிச் சமர்ப்பித்தார். அடியேன் அவருடன் சென்றது அதுவே கடைசி முறையாகி விட்டது.

குருஜியைப்பற்றி நினைக்கும் போதும், அவரைப்பற்றிப் பேசும் போதும் மனத்தில் தேனூறுவதை அனுபவிக்க முடிகிறது.

மோகனூரில் திரு. கி. வா. ஜ. அவர்களின் முதல் வருட நினைவாஞ்சலியின் போது சென்னை, பம்பாய், பெங்களூரு, கல்பாக்கம் முதலிய ஊர்களிலிருந்து அன்பர்கள் கூட்டம் வந்திருக்கிறது. காந்தமலை முருகனுக்கு காவிரியாற்றங்கரையிலிருந்து 108 பால்குடங்கள். நமது குருஜி, அவர் அண்ணா மாட்டுங்கா மாமா முன்னணியில் பாடிக்கொண்டு திருக்கோவிலை அடைந்து பகவானுக்கு அபிஷேக ஆராதனை வெகு சிறப்பாக நடந்தது. மதிய உணவுக்குப் பின் ஓய்வு. அப்போது பெங்களூர் அன்பர்கள் பக்கத்தில் நெரூர் சதாசிவ பிரமேந்திரர் அதிஷ்டானம் செல்ல எண்ணியிருந்தனர். அதுபோல் கல்பாக்கம் அன்பர்கள் கொடுமுடி தரிசிக்க எண்ணினர். மாலை ஆறு மணிக்கு கோவிலில் இசை வழிபாடு. அதற்குள் திரும்பிவிட வேண்டும். இந்தச் செய்தி குருஜியின் காதுக்கு எட்டுகிறது. குருஜி அடியேனை அழைத்தார். அடியேனிடம், நீ இங்கு என்ன காரியத்திற்கு வந்தாய்? அது முடியாமல் நீ எப்படி வேறு ஒரு காரியத்திற்குச் செல்ல திட்டமிடுகிறாய்? என அவர் கேட்ட விதத்தில் அடியேன் குருஜியின் கேள்விக்குப் பணிந்து விட்டேன். பெங்களூர் அன்பர் செல்ல வேண்டாம் என்று கூறினேன். அவர்களும் செல்லவில்லை. குருஜியின் கண்டிப்பிற்கு இது ஓர் உதாரணம்.

குருஜி மற்றவர்களின் மனம் நோகாமல் நடந்து கொள்வது நமக்குத்தான் தெரியுமே! சுவையாக இருந்ததா?

இப்பொழுது திரு. குமாரஸ்வாமியின் இன்ப அநுபவங்களைக் காணலாம். குரு கடாக்ஷத்தைப்பற்றிக் கூறி எவ்வாறு நம்மையும் அந்த இன்ப அநுபவத்தில் அழைத்துச் செல்கிறார் என்று பார்க்கலாம்.

## குரு கடாட்சம்

பல பிறவிகளில் செய்த நற்காரியங்களின் பயனாகவே ஒரு குருவின் கடாட்சம் எனும் பெரும் பாக்கியம் கிடைக்கிறது; அதற்கும் இறையருள் கூட வேண்டும் என்று சொல்வார்கள். எல்லோருக்கும் குருவின் முதல் சந்திப்பு மறக்க முடியாத ஒன்றாக அமைகின்றது. பஜனையின் போதோ, அவரது இல்லத்திலோ, அல்லது நண்பர்கள் இல்லத்திலோ குருஜியின் முதல் சந்திப்பு நிகழும். எங்களுக்கு குருஜியின் முதல் தரிசனம் கிடைத்த நிகழ்வை எல்லோருடனும் நான் இப்பொழுது பகிர்ந்து கொள்கிறேன்.

லக்னோவுக்கு 1976ஆம் ஆண்டு குடும்பத்துடன் வந்தேன். வீடு தேடிச் சென்றபோது நாராயணன் என்பவரை சந்தித்தேன். என்னை அறிமுகம் செய்துகொண்டவுடன், "உங்க பேரு குமாரசாமியா! கவலைய விடுங்கோ. என் பக்கத்து வீடு காலியாகிறது, அது உங்களுக்குத்தான்" என்று சொல்லி, வீட்டுக்காரரிடம் பேசி நிச்சயம் செய்தார்.

அங்கு குடியிருந்த சர்தார்ஜியை அவசரப் படுத்தி உடனே காலி செய்ய வைத்து என் லக்னோ வாழ்க்கையை சௌகரியமாகத் தொடங்க வைத்தார். அவரும் அவருடைய மனைவி ரெங்கநாயகி மாமியும் அத்யந்த நண்பர்களாகி விட்டனர். கொஞ்ச நாட்களில், பத்மா, சுப்ரமணியம், சுந்தரம் மாமா, ஷீலா, ராஜன், வோல்டாஸ் கணேசன், சந்திரா போன்றோருடனும் நட்பு ஏற்பட்டது. இந்த நட்புதான் எங்கள் வாழ்க்கையில் ஆன்மீக வழியில் பல பெரிய மாற்றங்களைக் காணச் செய்தது. நாராயண மாமாதான் குருஜியையும், திருப்புகழையும் எங்கள் வாழ்க்கையின் பக்க பலமாக ஆகும்படி வழிவகுத்தவர். இவர்களை என்றும் எங்களால் மறக்க முடியாது.

லக்னோவில் நூற்றுக் கணக்கான தமிழ் குடும்பங்கள் இருந்த போதிலும் பெரிய அளவில் பூஜைகளோ, பஜனைகளோ நடைபெறுவதில்லை. நாங்கள் இதைப் பற்றி அடிக்கடி கலந்தாலோசித்து, ஏதாவது ஒரு பெரிய விழாவை நடத்த வேண்டும் என்று முடிவு செய்தோம். அப்போது நாராயணன் மாமா, திரு. ராகவன் என்பவரிடம் 1958 முதல் திருப்புகழ் கற்றுக் கொண்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டு, அவரையும் அன்பர்களையும் லக்னோவுக்கு வரவழைத்து இரண்டு நாட்கள் தங்க வைத்து மூன்று நான்கு இடங்களில் பஜனைகள் நடத்தலாமே என்றார். ஆரம்பத்தில் நாங்கள் தயங்கினோம். ஆனால் நாராயணன் மாமா கொடுத்த தைரியத்தில் 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வைகாசி விசாகம் வரும் நேரம் திருப்புகழ் விழா நடத்த முடிவு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்தோம்.

நாங்கள் எதிர்பார்த்திருந்த நாளும் வந்தது. லக்னோ ரயில் நிலையம் சென்று திரு. ராகவன் அவர்களையும் அவர் மனைவி, மற்றும் மணி, ராமசுப்ரமணி மாமா, ஜிக்கி, மாலி போன்ற அன்பர்களையும் வரவேற்கச் சென்றோம். லக்னோ மெயிலிலிருந்து கோடி சூரிய பிரகாசத்துடன் மலர்ந்த முகத்தோடு இறங்கிய குருஜியைப் பார்த்தேன். எங்கள் மேல் அவருடைய கடாட்சம் விழுந்தது. அந்த முதல் நயன ஸ்பரிசம் என்னை கொள்ளை கொண்டது. நாராயண ஐயங்கார் எங்களை அறிமுகம் செய்யும்போது, "இவர் ரொம்ப பங்சுவல். எல்லாம் சரியா நேரத்துக்குப் பண்ணனும்னு சொல்வார்" என்றார். குருஜி சிரித்தபடி "அதுதான் மிகவும் அவசியம்" என்றார். நாங்கள் உடனே சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து பாதஸ்பரிசமும் பெற்றோம்.

அன்று காலை நாராயண ஐயங்கார் வீட்டிலும், மதியம் பத்மா வீட்டிலும் இருந்துவிட்டு, குருஜி மாலை எங்கள் இல்லத்துக்கு எல்லோருடனும் வந்து தங்கியிருந்தார். அன்று தான் முதன் முறையாக திருப்புகழ் பஜனை எங்கள் இல்லத்தில் நடைபெற்றது. குருஜியும் திருப்புகழும் என்னையும், மனைவி விமலாவையும் ஆட்கொண்டதை உணர்ந்தோம். எங்கள் வாழ்க்கையே ஒரு புதிய பாதையில் திரும்பியது.

மறுநாள் காலை 7 மணியளவில் லக்னோ கண்டோன்மெண்டில் ஒரு சிறிய முருகன் கோவில் இருந்த இடத்தில் பஜனை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போவதற்கு, பூஜை, பஜன் செய்வதற்கு என எல்லாவற்றுக்கும் முன் அனுமதி வாங்கவேண்டும். அன்பர் ஒருவர் கண்டோன்மெண்ட் அதிகாரிகளின் அனுமதி பெற்று அவருடைய அம்பாசிடர் காரில் குருஜியை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு. குறித்த நேரத்தில் குருஜி, மாமி, நாராயண ஐயங்காருடன் நானும் நண்பரின் காரில் சென்றேன். கண்டோன்மெண்ட் பகுதியை அடைந்ததும் காரில் திடீரெனக் கோளாறு உண்டாகிக் கார் நின்றுவிட்டது. எவ்வளவு முயற்சி செய்தும் கார் கிளம்பவில்லை. பஜனைக்கு நேரமாகிக் கொண்டிருந்தது. பூஜைக்கு வேண்டிய எல்லா பொருட்களும் காரில்தான் இருந்தன. எங்களுக்கு ஒரே பதைபதைப்பு; தவித்தோம். ஆனால் ராகவன் சாரோ அமைதியாக இருந்தார்.

என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்ற போது லக்னோவுக்கே உரித்தான பட்பட்டி என்னும் மோட்டார் சைக்கிள் வாகனம் ஒன்று அந்த வழியே வந்தது. நாங்கள் நிற்பதைப் பார்த்ததும் அதை ஓட்டி வந்த சர்தார்ஜி, வண்டியை நிறுத்தி இறங்கி வந்தான். ஆஜானுபாகுவாக தலையில் கட்டிய சிவப்பு டர்பன் ஒரு கிரீடம் போல் இருக்க கன கம்பீரமாக வந்து, எங்கே போக வேண்டும்? என்று கேட்டான். எங்கள் நிலைமையை விளக்கியதும், "ஆவோஜி, பைட்டோ. சலேங்கே" என்று வெகு பரிவுடன் குருஜியையும் மாமியையும் கைத்தாங்கலாக வண்டியில் ஏற்றி உட்காரவைத்தான். எல்லா பூஜை சாமான்களையும் வண்டியில் ஒழுங்காக எடுத்து வைத்தான். படபடவென்று கொஞ்ச நேரத்திலேயே பஜனைக்கு ஏற்பாடு செய்திருந்த இடத்துக்குக் கொண்டு சேர்த்தான்.

அந்த இடம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கிராமங்களில் இருப்பது போல் ஒரு சிறிய கோவில். அதில் ஒரு சிறிய முருகர். சுற்றி திறந்தவெளி. அங்கு நூற்றுக் கணக்கான பேர்கள் குழுமியிருந்தனர். முதல் நாள் எங்கள் இல்ல பஜனைகளுக்கு முப்பது நாற்பது பேர்களே வந்திருந்தனர். இப்போது எங்கிருந்து இவ்வளவு பேர்கள் வந்தனர் என்று திகைத்தோம்!

மேஜர் ராஜன் குருஜியையும் மாமியையும் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். பூஜை சாமான்களை எடுத்துக் கொண்டு நாங்கள் தொடர்ந்தோம். சர்தார்ஜிக்கு நன்றி கூறி வாடகைக் கொடுக்கலாம் என்று திரும்பியபோது அவன் மாயமாய் மறைந்து விட்டிருந்தான். எங்கிருந்து வந்தான்? எங்கே மறைந்து போனான்? சத்குருநாதனே சர்தார்ஜியாக வந்திருந்து குருஜிக்கு சேவை செய்தான் என்று நாங்கள் உறுதியாக நம்பினோம். ஏனென்றால் அது போன்ற வண்டிகள் கண்டோன்மெண்ட் பகுதிகளில் செல்ல அனுமதியில்லை. மேலும் நாங்கள் சேர்ந்த சில நிமிடங்களிலேயே நண்பரும் கார் தானே சரியாகிக் கிளம்பிவிட்டது என்று சொல்லிய படி வந்து சேர்ந்தார். எல்லாமே ஒரு அதிசயமாக, நாற்பது ஆண்டுகள் கழிந்தும், இந் நிகழ்வு என் மனதில் புரியாத புதிராக இருக்கிறது.

அன்று குருஜியின் திருப்புகழ் இசை வழிபாடு எல்லோரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தியது. ஆர்மி டிசிப்ளின் என்பார்கள்; ஆனால் அன்று நான் கண்டது திருப்புகழ் டிசிப்ளின்! நூற்றுக் கணக்கான பேர்களும் பூரண அமைதியுடன் இசை வழிபாட்டில் பங்கு கொண்டது என் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம். அதற்குப்பின் எத்தனையோ இசை வழிபாடுகளில் பங்கு கொண்ட போதிலும், லக்னோ பஜனை மனதில் நீங்காமல் பசுமையாக இருக்கிறது.

முதல் சந்திப்பிலேயே இத்தகைய ஒப்பற்ற அனுபவங்களைக் கொடுத்து எங்களை ஆட்கொண்ட சத்குருநாதனின் திருப்புகழைத் தன் கடைசி மூச்சு வரை பாடிய என் மனைவி விமலாவையும், நாராயண ஐயங்காரையும் இத்தருணத்தில் நினைவு கூர்கிறேன்.

குருகடாட்சத்தின் மகிமை என்னென்பது!

**குருஜி - ஒரு தீர்க்கதரிசி!**

குருஜி முக்காலமும் உணர்ந்தவர், ஒரு தீர்க்க தரிசி. சண்டிகாரில் ஒரு முருகன் கோவில் உருவாகப் போவதை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே மனத் திரையில் கண்டவர். இதை எங்கள் அனுபவங்கள் மூலமாக நிதர்சனமாக அறிந்தோம்.

1983-84 ஆண்டில் தில்லியிலுள்ள சப்தர்ஜங் எங்க்ளேவில் திரு. சிதம்பரம் மாமா விட்டில் திருப்புகழ் வகுப்பு நடத்த குருஜி முடிவுசெய்தார். வாராவாரம் செவ்வாய்க் கிழமை தோறும் மாலை ஆறு மணி முதல் ஏழு மணிவரை வகுப்பு. ஏன் செவ்வாய்க் கிழமை தேர்ந்தெடுத்தார்? அன்று ஒரு அன்பருக்கு வாராந்திர விடுமுறை நாள். அவருக்கு இடப்பட்ட பணி செவ்வாய் தோறும் தில்லியில் இருந்த ஜண்டேவாலாவிலிருந்த சியட் டயர் அலுவலகத்திலிருந்து மாலை ஐந்து மணிக்குக் குருஜியை திருப்புகழ் வகுப்புக்குக் கூட்டிக் கொண்டு வரவேண்டும்; வகுப்பு முடிந்ததும் குருஜியை அவரது வீட்டில் விட வேண்டும்.

இந்த வகுப்பில் அதிக அளவில் சிறுவர் சிறுமிகள் இருந்தனர். குழந்தைகள் இருந்தால் குருஜிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அதனால் இந்த வகுப்பு தொடக்கத்திலிருந்தே சிறப்பாக அமைந்துவிட்டது. 1986-87 ஆண்டில் ஒரு அன்பர் தம்பதிகளுக்கு சண்டிகாருக்கு மாற்றலாகி விட்டது. ஒரு செவ்வாய்க் கிழமை வகுப்பில் அவர்களுக்கு பிரிவு உபசாரம் நடந்தது. அப்போது குருஜி தனக்கே உரிய சிலேடை மொழியில் சொல்வார்: “இந்த தம்பதிகள் ஏன் சண்டிகார் செல்கிறார்கள் என நினைக்கிறீர்கள்? நமக்கெல்லாம் ஒரு அம்பாசிடர் வேண்டாமா? அதற்காகத்தான்” அம்பாசிடர் என்றால் உடனே தோன்றுவது அப்போது பிரபலமாயிருந்த அம்பாசிடர் கார் தான். இந்த அன்பர் சண்டிகார் சென்றால் அங்கு அவருக்கு அலுவலகத்தில் அம்பாசிடர் கார் தருவார்கள் என்று சூசகமாகக் குறிப்பிட்டார். அவ்வாறே நிகழ்ந்தது. இன்னொரு அர்த்தம்: சண்டிகாருக்கு திருப்புகழ் அன்பர்கள் சார்பாக இவர்கள் செல்கிறார்கள், நமது ‘அம்பாசிடராக’! அங்கு சென்று திருப்புகழ் இசை வழிபாட்டைத் தொடங்குவார்கள்.

சண்டிகாரில் ஒரு முருகர் கோவில் கட்ட வேண்டுமென அங்கிருந்த பக்தர்கள் பல வருடங்களாக முயற்சி செய்து கொண்டிருந்தனர். ஆனால் கோவில் எழும்பவில்லை. குருஜி அந்தத் தம்பதிகளிடம் சொன்னார்: "நீங்கள் சண்டிகார் போனவுடன் அங்கு குழந்தைகளுக்குத் திருப்புகழ் கற்றுக் கொடுங்கள். வாரா வாரம் தவறாது திருப்புகழ் பாட வேண்டும். எந்தப் பலனையும் எதிர்பார்த்து செய்யக் கூடாது. எவ்வளவு திருப்புகழ் பாடுகிறீர்களோ அவ்வளவு சீக்கிரம் முருகன் உங்களிடம் வந்து சேருவான்" இந்த ஆசியுடன் அந்த அன்பர் தம்பதிகள் சண்டிகார் சென்றனர்.

சண்டிகாரில் 10'க்கு 10' சிறிய அறையில் ஒரு வேல் வைத்து பூஜை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். "இங்கு நாங்கள் திருப்புகழ் பாடலாமா?" என்று கேட்டதற்கு, 'திருப்புகழா, அது என்ன?" என்று பதில் வந்தது. உடன் தம்பதியர் சில திருப்புகழ் பாடல்களைப் பாட, அங்கிருந்த பக்தர்கள் மிக மகிழ்ந்து "நிறைய திருப்புகழ் பாடுங்கள்" என்று வரவேற்றார்கள். வாரந்தோறும் செவ்வாய்க் கிழமையன்று திருப்புகழ் பஜனை அந்த அறையில் தொடங்கியது. கிருத்திகை, சஷ்டி நாட்களிலும் திருப்புகழ் பாடப் பட்டது. நாட்கள் செல்லச் செல்ல திருப்புகழ் பாடாமல் இருக்க முடியாது என்று பக்தர்கள் கூறும் அளவுக்குத் திருப்புகழ் எல்லோர் மனத்தையும் கவர்ந்து விட்டது.

திருப்புகழ் வகுப்பு சிறுவர்களுக்காகத் தொடங்கியது. எல்லா சிறுவருக்குமே தமிழ் படிக்கத் தெரியாது. அதனால் அவர்களுக்காக திருப்புகழ் பாடல்களை இந்தியில் எழுதி பிரதிகள் எடுத்து புத்தகம் போல் எல்லோருக்கும் கொடுத்தனர். குருஜியின் ஆசியுடன் சிறுவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. சிறுவர்களைத் தொடர்ந்து பெரியவர்களும் திருப்புகழ் பாடுவதில் ஈடுபாடு கொண்டு திருப்புகழ் இசை வழிபாட்டைக் கற்றுக் கொண்டனர். நான்கு ஆண்டுகள் சிறப்பாக வகுப்புகள் நடந்தன.

முருகன் இந்த தம்பதிகளைப் போன்றே இன்னும் பலரை சண்டிகார் கொண்டு வந்து சேர்த்தான். வாயு சேனையில் பணிபுரிந்து கொண்டிருந்த ஒரு பக்தர் தம் வேலையிலிருந்து விருப்பு ஓய்வு பெற்று, தன் மனைவியுடன் திருமுருகனுக்கும் திருப்புகழுக்கும் தொண்டு செய்வதற்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு பெருமை சேர்த்தார்கள். ஒரு வங்கி மேலதிகாரியின் உதவி நாடி சென்றபோது, 'எனக்கு பக்தி, பூஜையிலெல்லாம் நம்பிக்கை இல்லை' என்றார். அவரே எதேச்சையாக ஒரு செவ்வாய்க் கிழமையன்று குழந்தைகளும், பெரியவர்களும் பாடிய திருப்புகழ் பஜனையைக் கேட்டுவிட்டு, மிகவும் பாராட்டி, 'என்னாலான எல்லா உதவிகளும் செய்கிறேன்' என்றார்.

ஒவ்வொரு முறையும் குருஜியின் அறிவுரை அத் தம்பதிகளுக்கு நினைவு வரும். திருப்புகழ் முருகனை விரைவில் கொண்டு வரும் என்று உறுதியுடனும் ஊக்கத்துடனும் தம் பணிகளைத் தொடர்ந்தனர்.

குருஜியும் சண்டிகாருக்கு மே 1987ஆம் ஆண்டிலும், 1991ஆம் ஆண்டிலும் இதற்கிடையிலும் வந்திருந்து உற்சாகப் படுத்தினார். ஒரு முறை வந்திருக்கும் போது, 'இன்று நான் பாடப் போவதில்லை. நீங்கள் பாடுவதைக் கேட்கப் போகிறேன்' என்றார். பாடல்களைக் கேட்டு, மகிழ்ந்து பாராட்டினார்.

முருகன் திருவருளுடன் கோவில் கட்டுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கின. குருஜி சண்டிகார் அன்பர்களுக்குக் கோவில் பற்றிய பல அறிவுரைகளை வழங்கினார். என்னென்ன சன்னதிகள் இருக்க வேண்டும், பூஜைகள் எப்படி நடைபெற வேண்டும், உள்ளூர் பக்தர்கள் சிலரை கோவில் நிர்வாகப் பொறுப்பில் பங்கு பெற வைக்க வேண்டும், அதிகமான சொத்துகள் சேர்க்கக் கூடாது ஏனென்றால் பின்னாளில் பல பிரச்சினைகள் உண்டாகும் போன்று பல முக்கிய விஷயங்களை விளக்கிக் கூறினார்.

அவருடைய நல்லாசியுடன் கும்பாபிஷேகம் நடந்து, இரண்டாவது கும்பாபிஷேகமும் அவருடைய தலைமையில் நடைபெற்றது. குருஜியும் தில்லி அன்பர்களும் பலமுறை சண்டிகாரில் திருப்புகழ் இசைவழிபாட்டை நடத்தியுள்ளனர். சென்ற ஆண்டு திரு. மணி அவர்கள் தலைமையில் இசைவழிபாடு சிறப்பாக நடந்தேறியது. சமீபத்தில் கோவை திருப்புகழ் அன்பர்கள் கார்த்திகேய சுவாமி ஆலயத்தில் மூன்று நாட்கள் இசை வழிபாட்டை நடத்திவைத்தார்கள். ஒவ்வொரு நாளும் சண்டிகாருக்குத் திருப்புகழைக் கொண்டு வந்த குருஜியையும், மறைந்த மாமணி விமலா குமாரசுவாமியையும் நன்றியுடன் நினைக்காதவர்கள் கிடையாது.

இருபத்தாறு ஆண்டுகள் கடந்து, விண்ணளாவிய ராஜகோபுரத்துடன் சண்டிகார் கார்த்திகேய சுவாமி ஆலயம் இன்றும் சீரும் சிறப்புடன், குருஜியின் தீர்க்க தரிசனத்துக்கு நிலையான சான்றாக ஓங்கி நிற்கிறது.

ஆமாம் இவ்வளவு நேரம் நாம் பல அன்பர்களின் அநுபவங்களைப் பகிர்ந்து கொண்டோமே முக்கியமாக ஒருவரின் கருத்துக்களை கவனியாது விட்டு விட்டோமே. அவர்தான், இந்த திருப்புகழ் குருஜியிடமிருந்து நம்மிடம் வருவதற்கு வழிகாட்டிய திரு. நாராயணன் என்பவரின் மனைவி ரெங்கநாயகியவர்கள். எவ்வாறு திருப்புகழ் குருஜியால் ஆரம்பிக்கப்பட்டது என்று அவர் கூறுவதை நாமும் கேட்டு இன்புறலாமா?

ஒரு நாள் இர்வின் ரோடு பிள்ளையார் கோவிலில் திரு. நாராயணன் அவர்களும், திருமாலி அவர்களும் திரு. குருஜியைச் சந்தித்திருக்கிறார்கள். என்னவோ தெரியவில்லை அவர்கள், "சார் நீங்கள் எங்களுக்கு திருப்புகழ் பாடல்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும்" என்று கூறினர் அதற்கு குருஜியும், "திருப்புகழா? எனக்கு ஒரு பாடலும் தெரியாதே? புத்தகம் கூட இல்லையே. சரி. ஆண்டவன் சித்தம் என்ன என்று பார்க்கலாம்" என்றாராம்.

ஒரு நாள் செவ்வாய்க்கிழமை இந்த இருவரும் குருஜி வீட்டு வாசலில் போய் நின்று பெல் அடித்திருக்கிறார்கள். கதவைத்திறந்துவுடன் குருஜிக்குத் தாங்கவில்லை.

அவர்களை உட்காரச் செய்து பேசிக்கொண்டு இருந்தபோது மீண்டும் திருப்புகழைப்பற்றித்தான் பேச்சு. கட்டாயம் திருப்புகழ் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று குருஜியை இருவரும் வற்புறுத்தினர். குருஜியும் முன்போல் தனக்கு ஒன்றும் தெரியாது. தன்னிடம் ஒரு புத்தகம் கூட இல்லை என்று சொல்ல, அதற்கு என் கணவர் நாராயணன், "கவலையை விடுங்கோ சார். புத்தகம் தானே? நான் வாங்கி வருகிறேன்" என்றார். இறைவனே இவர்களை தூதுவர்போல் அனுப்பியிருப்பாரோ என்று இப்பொழுது தோன்றுகிறது. பின்னர் மாலி சுருதிப்பெட்டி வாங்க, திரு. நாராயணன் அவர்கள் ஆர். வி. ஐயர் என்பவரிடமிருந்து ஐந்து திருப்புகழ் புத்தகங்களை வாங்க, குருஜி திருப்புகழ் பாடல்களைக் கற்றுக்கொடுக்க சம்மதம் தெரிவித்தார். ஒருநாள் திருப்புகழ் வகுப்பு ஆரம்பித்து இவர் என்ன பாட்டு கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார் தெரியுமா? 'ஏவினை நேர்விழி' என்ற திருச்செந்தூர் பாடல்தான். அப்பொழுது பிள்ளையார் பாட்டில் ஆரம்பிக்க வேண்டும் என்று கூடத் தெரியாத நிலை. புத்தகம் இல்லாத மற்றவர்கள் யாவரும் தனியாக ஒரு நோட்டுப்புத்தகம் வாங்கி அதில் திருப்புகழ் பாடல்களை எழுதி செவ்வாய், வெள்ளிதோறும் திருப்புகழ் வகுப்புக்கு வந்து கற்றுக்கொண்டு, இவ்வாறு திருப்புகழ் வகுப்பு இனிதே நடந்தது.

1959ஆம் ஆண்டு எனக்குத் திருமணம் நடந்தேறியது. காலையில் குருஜியும் திருமணத்துக்கு வந்தும் அந்தக் கூட்டத்தில் அவரைத் தெரியவில்லை. சாயந்தரம் குருஜியின் அண்ணா பிள்ளைகள் இருவரும் என்னிடம் வந்து நீங்களும் குருஜி நடத்தும் திருப்புகழ் வகுப்புக்கு வாருங்கள் என்றனர். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்புறம்தான் என் கணவர் திரு. நாராயணன் மூலம் குருஜி நடத்தும் திருப்புகழ்பற்றியும் அவர் வகுப்புக்குச் சென்று வருகிறார் என்பதுபற்றியும் தெரிய வந்தது.

"நான் முதலில் திருப்புகழ் வகுப்பிற்குப் போகாது பஜனைகளுக்கு மட்டும் போய் வந்தேன். மிகவும் நன்றாகவும் இனிமையாகவும் இருந்தது. என் மனதுக்கு மிகவும் பிடித்தது. ஆனால் 1968ஆம் ஆண்டு எங்களுக்கு லக்னோவிற்கு டிரான்ஸ்பர் ஆயிற்று அதனால் வகுப்பிற்குப் போக முடியவில்லை. எங்களால் சார் என்று அழைக்கப்படும் திரு. குருஜி அவர்கள் ஆபீஸ் விஷயமாக லக்னோ வந்தால் எங்கள் வீட்டில்தான் தங்குவார். குருஜி அவர்களை நாங்கள் யாவரும் சார் போட்டுத்தான் கூப்பிடுவோம். அவர் எங்கள் வீட்டில் தங்கும் பொழுது பல நிகழ்ச்சிகளைப்பற்றி விரிவாக எங்களிடம் பகிர்ந்து கொள்வார். அப்பொழுது திருப்புகழ் எவ்வாறு ஆரம்பித்தது என்பது பற்றியும் விளக்கினார்.

நான் திருப்புகழ் வகுப்பு நடத்த ஆரம்பித்ததே ஒரு சுவையான நிகழ்ச்சியாகும். என் மகன் தில்லி ரமண கேந்திராவிற்கு குருஜி வகுப்பிற்குப்போய் அவர் கற்றுக்கொடுக்கும் பாடல்களையும் பஜனையில் பாடும் பாடல்களையும் ஒன்று விடாமல் பதிவு செய்து அனுப்புவான். அதனைக் கேட்டவுடன் ஆர்வம் வந்து நான்

அவைகளைக் கேட்டு பாடிப் பாடிக் கற்றுக்கொண்டேன். பிறகு விமலா குமாரஸ்வாமி, பத்மா சுப்ரமணியம், ஷீலா சுந்தரம், பத்மா போன்றவர்கள் வந்து கற்றுக்கொண்டு, அவர்களும் சிரத்தையுடன் பாட இப்படியே அங்கு திருப்புகழ் பரவ ஆரம்பித்தது. மேலும் குருஜி அவர்கள் அங்கு வரும் போது ஆர். டி. எஸ். காலனி, முருகன் கோவில் போன்ற இடங்களில் பஜனைகள் ஏற்பாடு செய்வோம். இப்படியே லக்னோவில் திருப்புகழின் இனிமை பெருகிற்று. பிறகு நாங்கள் டிரான்ஸ்பரில் வேறு இடம் சென்றுவிட்டோம்.

நாங்கள் போபால் சென்றபிறகு பல முறைகள் குருஜி எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார். எப்பொழுதும்போல் ஒருமுறை படி விழா டில்லியில் நடந்தது. அதற்காக லக்னோவிலிருந்து குமாரஸ்வாமி என்பவர் என் கணவரைக் கூட்டிக்கொண்டு தில்லிக்கு வந்தார். படி விழா பஜனையும் முடிந்தது. குருஜிக்கு யாவரும் மரியாதை செலுத்தி மாலை போடும்போது மற்றவர்களைப்பார்த்து, "எனக்கு மாலை போடாதீர்கள். இங்கே என் அருகில் இருக்கிறாரே இந்த நாராயணனுக்குப் போடுங்கள். இவர்தான் இன்று நான் திருப்புகழ் பாடுவதற்குக் காரணம். திருப்புகழ் பிரபலமானதற்குக் காரணமே இவர்தான் என்று கூடச் சொல்லலாம்" என்று கூறி மலர் மாலையை என் கணவருக்கு அணிவித்தார். இது என் வகையில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும். ஏனென்றால் எல்லோரும் குருஜிக்குத்தான் கொடுப்பார்கள். ஆனால் குருஜியிடமிருந்து வாங்குவது என்பது ஒரு பெரிய மகத்தான விஷயம் என்று நான் கருதுகிறேன்.

1987ஆம் ஆண்டு திரு. நாராயணன் அவர்களுக்கு ஒரு விபத்து நடந்தது. அதைப்பற்றிக் கேள்விப்பட்ட குருஜி அவர்கள் சண்டிகாரில் இருக்கும் குமாரஸ்வாமியை ஆஸ்பத்திரிக்குச் சென்று திரு. நாராயணன் அவர்களைக் கவனித்துவரச் சொன்னார். ஒருவாரம் எங்களுடன் திரு. குமரஸ்வாமி அவர்கள் இருந்து எல்லா உதவியும் செய்து கொடுத்தது இதமாக இருந்தது. பின் தில்லிக்கு வந்து விட்டோம். வெலிங்டன் ஆஸ்பத்திரியில் சேர்ந்து பின் குணமாகி வீடு திரும்பினோம். வாழ்க்கையில் இதை மாதிரி பாக்கியம் யாருக்குமே கிடைக்காததை நினைத்து இன்றும் பூரித்துப்போகிறேன். ஆனால் துரதிருஷ்ட வசமாக என் கணவர் திரு. நாராயணன் அவர்கள் 1987ஆம் ஆண்டு மகா கார்த்திகையின் போது காலமாகி விட்டார். விஷயம் தெரிந்து குருஜி வந்து அண்ணாமலை தீபம் அன்று காலமாகி இருப்பதால் கார்த்திகை விளக்கு ஏற்றாமல் இருக்காதீர்கள். நல்ல நாளில் இறைவனிடம் சோதியுடன் கலந்திருக்கிறார் என்று எல்லா மாதர்களிடம் சொல்லி வீட்டில் விளக்கு ஏற்றச் சொன்னார். இவ்வாறு யார் சொல்வார்கள்?

இதையெல்லாம் நினைத்து நான் அசைபோட்டுக்கொண்டிருக்கிறேன். குருஜியின் ஆசீர்வாதத்தினால் என் மகன், மருமகள் குடும்பத்துடன் இருந்துகொண்டு பழைய நாட்களின் சுவையை மீண்டும் மீண்டும் கண் முன் கொண்டு வந்து அனுபவித்துக்

கொண்டிருக்கிறேன். குருஜி புகழ் முருகன் அருளால் ஓங்க வேண்டும். நிறைய அன்பர்கள் திருப்புகழ் பாட வேண்டும் என்று அந்த முருகனை பிரார்த்திக்கிறேன்.

திருப்புகழ் குருஜியிடமிருந்து உதித்தது பற்றிப் பார்த்தோம் அல்லவா? மற்றுமொரு பங்களூர் அன்பரின் அனுபவத்தை இப்பொழுது கண்டு களிப்போம்.

குருநாதர் சொன்ன சீலம் -

"சும்மா இரு சொல்லற" என்று முருகப்பெருமான் தனக்கு அளித்த அறிவுரைகளையே அவிரோத ஞான உபதேசமாகவும் பிரணவ உபதேசமாகவும் கொண்டு அவ்வுபதேசத்தையே "குருநாதர் சொன்ன சீலம்" என்று அருணகிரிநாதர் கந்தர் அலங்காரப் பாடலில் குறிப்பிடுகிறார். மனோலயத்தையும், மவுன நிலையையும் கூட்டும் இவ்வரிய உபதேச மொழியில் "சீலம்" என்ற பதத்திற்கு ஒரு விரிவாக, விளக்கமாக உருக்கொண்டுள்ளது உயர்திரு குருஜி ராகவன் அவர்களின் பக்தி இயக்கமே. அதில் இன்றியமையாத அம்சமாக உள்ளது அவர் கடை பிடித்த பண்பாடுதான்.

சீலம் என்பது பண்பின் சிகரம். பல நிலைகளிலும் நல்லொழுக்க நெறியில் நிற்பதையே சீலம் என்பர். தருமம் உள்ள இடத்தில் சீலம் விளங்கும். "வேதோ அகில தர்ம மூலம்" என்பது மநுவாக்கியம். பண்பு பெற்ற முருகனடியார்களுடனே கலந்து, குணம் அடைய வேண்டி முருகனருள் பெற வேண்டும் என்று, "கண்டு மொழி" என்னும் திருப்புகழ் பாடல் விளக்குகிறது.

ஆன்மீக அருளாளராக விளங்கி வந்த திருப்புகழ் தொண்டர் குருஜி அவர்கள் நல்ல பண்பு உடையவர். சிறந்த குறிக்கோளுடன் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். செந்திலாண்டவன் அருள் பெற்று, திருப்புகழ் முதலிய ஞான நூல்கள் மூலம் அன்பையும், அவிரோதத்தையும், ஆன்மீகத்தையும் மக்கள் மனத்தில் உணர்த்த திருப்புகழ் பாடும் பணியையே தனது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டும், வாழ்க்கைக்குத் திருப்புகழ் என்ற குறிக்கோளும் கொண்டு உலகெங்கும் அமைதி நிலவ வேண்டும் என்று வேண்டினார்.

திருப்புகழ் பாடும் அன்பர்களிடம் அன்பைப் பொழிந்து, அவர்களையே திருப்புகழ் அன்பர்கள் என்று அழைத்தார். தனி மனித இசை வழிபாட்டைவிட சிறப்பாக விளங்கும் கூட்டு வழிபாடு அமைத்து அதில் முருக அன்பர்கள் யாவரையும் இணைத்து ஆன்மிக அருள்பெற உதவினார். அது ஒரு நல்ல முறையில் செயல்பட இசை வழி பாட்டு முறையை உருவாக்கினார் குருஜி. குருஜி அவர்களிடம் கலை உணர்வும், கற்பனை வளமும், குரல் வளமும் இயல்பாக அமைந்திருந்தது. இசை வழிபாட்டில் சந்தம், பாவம், தாளம் சற்றும் குறையாமல் அழுத்தம் தரும் சொல் வன்மையுடன் பாட வழி காட்டினார். குருஜி அவர்களே, செந்தில் ஆண்டவனை உணர்ந்து உணர்ந்து, எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு, இனிய கம்பீர குரலில்

திருப்புகழ் பாடி, தான் அடைந்த பேரின்ப நிலையை மற்றவர்களும் அடைய வழி காட்டினார். இதுவும் அவரிடம் காணும் ஒரு சிறந்த பண்பாகும்.

பரம் பொருளை மறவாமல் எப்பொழுதும் நினைப்பதும் ஒரு சீலமே. குருஜி அவர்கள் எப்பொழுதும் ஆண்டவன் நினைவாகவே வாழ்ந்தார். 'முருகா முருகா சரணம் சரணம்' என்று எப்பொழுதும் மனமுருகித் தான் துதிப்பதுடன், அன்பர்களும் அறிவாற்றலும் பெருக, இடரானதும் தொலைய அருள் ஞான இன்பம் பெருக உள்ளம் உருகி விருப்பமுடன் பாடி வேண்டும்படி செய்தார். அவ்விதம் ஒரு பக்தி இயக்கத்தையே உருவாக்கினார். பக்தியால் மா திருப்புகழ் பாடி முருகனின் இனிய தாள் நினைப்பைத் தம் தம் இதய வாரிதிக்குள் உறவாகி உய்ய வழி நாடச் செய்தார். குருஜி அவர்களின் அயராத உழைப்பும், தொண்டு மனப்பான்மையும் சிறப்பானது. என்றென்றும் தொண்டு செய்து சிவ சேவை கண்டு திருப்பாத தொண்டர் என்ற பெயர் பெற வேண்டினார். திருப்புகழ் தொண்டண் என்ற பட்டமும் பெற்றார்.

குருஜி அவர்களின் பண்பாடு இயக்கத்தில் தலையான அம்சம் கட்டுப்பாடு கடை பிடிப்பதே. அன்பர்கள் யாவரும் எந்நிலையிலும் விதிக்கப்பட்டிருக்கும் நியதிகளை எப்பொழுதும் அவசியம் கடை பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இசை வழிபாடு 'ஓம்' என்ற ஒலியுடன் ஆரம்பித்து முறையாக திருப்புகழ் பாடுதல் மற்றும் அருச்சனை, பிரார்த்தனையைத் தொடர்ந்து, மந்திர புஷ்பம் அடங்கிய மந்திரம் முழுவதையும் உச்சரித்து பின்னர் சாந்தி சுலோகத்துடன் 'ஓம்' என்ற பிரணவத்துடன் நிறைவு பெறும் வரையில் அன்பர்கள் அனைவரும் அமைதி காக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். இதுவே குருஜி அவர்களின் பண்பாடு இயக்கத்தின் சிறப்பான அம்சம் ஆகும். இசை வழிபாட்டில் இணைந்தோம், பண்பாட்டில் சிறப்பு கொண்டோம். நாமும் பண்புடைய சிந்தை அன்பராக விளங்கி ஆண்டவன் திருவருளை வேண்டுவோம். நமக்கு ஆண்டவன் திருவருள் கிட்டுவது திண்ணமன்றோ!

வேறு ஒரு அன்பரான வி. பட்டாபிராமன் அவர்களின் விநோத அநுபவங்களையும் நாம் இப்பொழுது பார்க்கலாம்.

குருஜி அவர்களின் திருப்புகழ் வகுப்புகளிலும், இசை வழிபாடு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கும் பாக்கியம் 1976ஆம் ஆண்டு முதல் 1987ஆம் ஆண்டு வரை எனக்குக் கிடைத்தது. இது என் வாழ்க்கையில் பல விதங்களில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. "அழித்துப்பிறக்க வொட்டா அயில் வேலன் கவியை எழுத்துப்பிழையறக் கற்கின்றிலீர்" என்றார் அருணகிரிநாதர். குருஜி அவர்கள் இதற்கு ஒருபடி மேல் போய் எழுத்துப்பிழை மட்டுமல்ல இசைப்பிழையும் இல்லாமல் கற்றுக் கொடுத்தது என்னுள் உள்ள திருப்புகழ் ஈடுபாட்டை மேலும் செழிப்பாக வளர்த்தது. எனக்கு ஏற்பட்ட அநுபவங்களைச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு புத்தகமே எழுத வேண்டியிருக்கும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் அவரே '20ஆம் நூற்றாண்டின் அருணகிரி' என்பதில்

எனக்குச் சிறிதும் ஐயமில்லை. 1988ஆம் ஆண்டு டில்லியில் நடந்த வெள்ளிவிழா நிகழ்ச்சியில் நானும் ஒரு தொண்டனாகப் பங்கு கொண்டதும் மறக்க முடியாத ஒரு சம்பவம். குருஜி அவர்களின் நிர்வாகத் திறமையும் என்னை வெகுவாகக் கவர்ந்தது. அவர் ஒரு தெய்வப் பிறவி. என் நினைவில் நிரந்தரமாக நிலைத்துள்ள ஆசான் மற்றும் வழிகாட்டி குருஜி அவர்கள் மட்டும்தான் என்று உறுதியாகக் கூறுவேன்.

கர்னாடகா திருப்புகழ் அன்பர்கள் சேர்மேன் திரு. எஸ்..ஜி. இராமகிருஷ்ணன் அவர்கள் ஒரு மாறுதலுக்காக குருஜியிடம் பேசுவதுபோல எழுதியிருப்பதை நாமும் அவர்களுடன் சேர்ந்து ரஸித்து இன்புறலாம்.

பதி—பசு—பாசம்

குருஜி --- ராமக்ருஷ்ணா உன் ஊர் எது?

நான் – நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் தி. நகரும், மைலாப்பூரும்தான். அப்பாவின் பூர்விகம் கரூர்

குருஜி -- நீ கரூர் போயிருக்கிறாயா? பசுபதீசுவரர் கோவில் பார்த்திருக்கிறாயா?

நான் --- கரூர் போகும்போதெல்லாம் அந்தக் கோயிலும், நெரூர், வெண்ணெய் மலை முருகன், தான் தோன்றி மலை பெருமாள் கோவிலும் தரிசித்து வருவேன்.

குருஜி — கரூர் ஈசுவரன் பெயரான பசுபதீசுவரன் என்று வரும் திருப்புகழ் பாட்டு என்ன என்பது உனக்குத் தெரியுமா?

நான் --- தெரியும். கீரவாணி ராகத்தில் அமைந்த தசையாகிய என்ற பாடல்தான்.

குருஜி -- ராகம் இருக்கட்டும். அந்த பாட்டின் விசேஷம் சொல்கிறேன் கேள் --- என்று சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு பசுவை, மாடு மேய்ப்பவன் அச்சுடன் சேர்த்துக் கயிற்றால் கட்டுவான். பசு கடைசி கயிற்றின் நுனி வரை சென்று புல் மேயும். அச்சின் பக்கத்தில் உள்ள புல்லை மேயாது. நாம் எல்லாம் பசுவாகும். இறைவன் நம்மை மாயை என்னும் கயிற்றில் கட்டி வைத்திருக்கிறான். நாமும் வெகுதூரம் விலகி, உலக சுகங்களை அநுபவிக்க ஆசைப்படுகிறோம். கயிற்றின் நீளத்தைக் குறைத்தால் இறைவன் அருகே எளிதாகச் செல்லலாம். அதே போன்று பாசக்கயிற்றை நீக்கி விட்டால் இறைவனை அடையலாம்.

சரி, உலக பசு பாசத்தால் வரும் கஷ்டங்கள் யாவும் வியாதியால் வரும் கஷ்டங்களை விட அதிகமாக நம்மைத் தாக்கும் என்று எந்தத் திருப்புகழ் பாட்டு சொல்கிறது சொல் பார்க்கலாம்?

நான் --- மௌனம் சாதிக்கிறேன்.

குருஜி --- நான் சொன்னதிலிருந்தே நீ உடனே பற்றிக்கொண்டு சொல்ல வேண்டாமா? அப்படி ஆரம்பிக்கும் 'பழனி' தலப்பாட்டில் முதலில் உறவு கிளை, தாயர், தந்தை, மனை, பாலர் என்று சொல்லிவிட்டு பிறகுதான் மலஜல சஞ்சலங்களால் வரும் வியாதி எனச் சொல்வதை நீ கவனித்திருக்க வேண்டாமா? (உலக பசு பாச தொந்தம்)

சரி. பந்த பாசத்தை எப்படிக் குறைப்பது என்பதைச் சொல்கிறேன் கவனமாகக் கேள். ஒவ்வொரு விஷய சுகத்திலும் இருக்கும் negative points களை நினைத்துப் பார்த்தோமேயானால், அந்த சுகத்தின் மீது நமக்கு வைராக்கியம் வரும். திருப்புகழ் பாக்களில் வியாதிகள் கூறி வருவதற்குக் காரணம் என்ன தெரியுமா? நம் உடல் மீதுள்ள பாசத்தை நீக்கி நான் வேறு என் உடல் வேறு என அறிந்து கொள்வதேயாகும்.

நான் --- இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. அந்தந்த வியாதி பெயர் வரும் திருப்புகழ் பாடல் பாடினால் அந்தந்த வியாதி சரியாய்ப் போகும் என இதுவரை நினைத்திருந்தேன்.

குருஜி --- கடவுளை நினைத்தால், அவனை வணங்கினால் வியாதியை சமாளிப்பதற்குத் தகுந்த சக்தியை அவன் கொடுப்பான்.

பஜனை - முருக மயூர பாடல்

நாம் சில பொருள்கள் மீதும் சில மனிதர்கள் மீதும் விபரீத ஆசைகள் வைக்கிறோம். அதற்கும், பூர்வ ஜன்ம அநுபவமேதான் காரணம். மாயையால் தோன்றும் முக்குணங்களே ஆசைகளுக்குக் காரணம். இப்பிறவியில் ஆசைகள் யாவும் நம் குணங்களை மாற்றிவிடுகின்றன. ஆசை எனும் காமம் அதிகமானால் மோகம் உண்டாகிறது. ஆசைப்பட்டதைத் தடுப்பவன்மீதும், நிறைவேறாததைத் தடுப்பவன் மீதும் வருவது கோபம் எனப்படும். ஆசைப்பட்டது கிடைத்து அதனை வேறு யாரிடமும் கொடுக்காதது லோபம் என்று கூறலாம். ஆசைப்பட்டது கிடைத்தால் மதம் ஆகும். அப்பொருள் நம்மிடம் இல்லாது பிறரிடம் இருப்பின் பொறாமை உண்டாகும். இவ்வாறு முக்குணங்கள் நம்முடனேயே பிறந்து, வளர்ந்து நம்மை தீய வினைகளைச் செய்யத் தூண்டி, பாப வினைகள் தருவதால், அவைகள் உட்பகை எனப்படுகின்றன. அவற்றை வைராக்கியத்தால் வென்றால் அவிரோதத்தின் இரண்டாம் நிலையைக் காணலாம். ஆசைப்பாடு உற நிலையான வைராக்கிய ஞானம் அடைய முயற்சிக்க வேண்டும். ஞானம் பெறுவதற்கு அடியார்களுடன் சேர வேண்டும்.

## பஜனை - வரிக்கலையின் நிகரான

நாம் வாழ்க்கையில் ஒரு சிலர் மீது அதிக அன்புடன் பழகுகிறோம். ஒரு சிலரை காரணமின்றியே வெறுக்கிறோம். ஒரு பூனை எலியைக் கண்டவுடனேயே அதன் மீது பாய்கிறது. புலி, ஆடு, மாடு மீது காரணமின்றி பசிக்காத போதும் பாய்கிறது. பாம்பும் கீரியும் அவ்வாறே இந்த விரோத மனப்பான்மை கொண்டுள்ளது. இது அவைகளின் பிறவிக்குணமாகும். இதனை நாமும் வெல்ல முயற்சிக்க வேண்டும். ஒருத்தருடன் உறவாகி, ஒருத்தருடன் பகையாகி இருக்கும் படுபாவியாகாமல் இருக்க வேண்டுமேயானால், உயர்ந்த குண சீலம் அருள வேண்டிக் கொள்ள வேண்டும். நாமும் மிருகங்கள் போன்று இருக்கலாகாது.

ஒரு முறை விரகர நோக்கியும் என்ற மனோலயம் இராகத்தில் அமைந்த திருப்புகழ் பாடலுக்கு போக்கும் வரவும் என்ற கந்தர் அலங்காரப் பாடல் பாடினார் திரு குருஜி அவர்கள்.

இறைவனை இடைவிடாது இரவு பகலற, உளக்கண் நோக்கி, தவ முறை தியானம் செய்யும் சிவயோகிகள் நெஞ்சில் இறைவன் தோன்றுவான். அப்படி தியானம் செய்து, சிவ ஞானம் பெற்றவர்கள், நம்மைப்போல் இரவு, பகல், புகழ், வசை, துக்க, சுகம், போக்கு, வரவு எனும் இரட்டையர்களில் உள்ள பேதத்தை, விரோதத்தைக் காணமாட்டார்கள். அத்வைத அநுபூதி நிலையில் இருப்பார்கள். இதுவே அவிரோதத்தின் மூன்றாம் நிலையாகும். நமக்கு அத்வைத அவிரோதம் கிடைப்பது கஷ்டம். அனாவசியமாக பிறர் மீது விரோத பாவம் கொள்ளாதிருக்கவாவது முயற்சித்தல் வேண்டும்.

## திருப்புகழ் மாலை புத்தக வெளியீடு -

திருப்புகழ் மாலை புத்தகம் தயாரான போது அதில் பல பிழைகள் இருந்தன. அதனால் குருஜியின் வாக்குப்படி "சைவ சித்தாந்த நூற்பதிப்பகக் கழகம் வெளியிட்ட புத்தகத்தை மாஸ்டராகக் கொண்டு ஒரு திருப்புகழ் புத்தகத்தை வெளியிடலாம் என்று எண்ணி வெளிவந்ததுதான் திருப்புகழ் மதாணி.

ஒரு வைகாசி விசாகம் பஜனையின் போது ஒவ்வொரு அநுபூதிப்பாடலுக்கும் இறைவனுக்கு ஒரு அன்பர் மலர் சமர்ப்பித்தலைப் பார்த்து மகிழ்ச்சி கொண்ட குருஜி அவர்கள் வரும் எல்லா பஜனைகளிலும் தொடர்ந்து மலர் சமர்ப்பிப்பதை தொடரச் சொன்னது அவர் அன்பர்களின் செயலில் எவ்வளவு கவனமும், மதிப்பும் வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

1988ல் கர்னாடகாவில் எனக்கு ஹிந்தியும், கன்னடமும் தெரியாத நிலையில் குருஜியின் உதவியுடன் தியாகராஜனின் பெண் வைஷ்ணவியை உதவச் செய்து புத்தகங்கள் வெகு விரைவில் இரண்டு மொழிகளிலும் வெளி வரச் செய்தது குறித்து யாவருக்கும் மகிழ்ச்சியே. இது குருஜி செய்த உதவியால்தான் என்று கூறாமல் இருக்க முடியுமா?

இவ்வளவு நேரம் பல அன்பர்கள் தங்கள் அநுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொண்டதைக் கண்டோம். முதிர்ந்த திருப்புகழ் அன்பர்களான திரு. நீலகண்டன் அவர்களும் அவரது மனைவி சீதா நீலகண்டன் அவர்களும் தங்கள் இளமைக்காலத்தை நினைந்து என்ன சொல்கிறார்கள் என்பதைக் கண்டு களிப்போம்.

நாங்கள் மும்பையிலிருந்து தில்லி லோதி காலனிக்கு 1978 இல் வந்த பிறகு ஒருநாள் எதிர் வீட்டில் ராக தாளங்களுடன் அநேகம்பேர் ஒரே மாதிரிப் பாடும் சத்தம் கேட்டு உருகி நின்றோம். அங்கு சென்று பார்த்ததில் ஒரு ஆண்மகன் தலைமையில் ஆண் பெண்கள் இருபாலாரும் வேறு வேறு ராகங்களில் வேறு வேறு சந்தங்கள் அமைந்த பாடல்களை ஒரே மாதிரி சுருதி பிசகாமல் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டு மனதில் ஒரு இனம் புரியாத சந்தோஷம் பரவுவதை உணர்ந்தோம். அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் பாடல்களுக்கு தகுந்த ராக தாளங்கள் இயற்றி, குருஜி என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் திரு. ஏ.எஸ். இராகவன் அவர்கள் எல்லோருக்கும் இலவசமாக கற்றுக் கொடுக்கிறார் என்பதை அறிந்த எங்கள் ஆனந்தத்தை விவரிக்க முடியவில்லை. எங்களுக்கும் கற்றுக்கொள்ள வேண்டும் போல் தோன்றியது. நல்ல வேளை அருகிலேயே ஜிக்கி என்று அழக்கப்படும் ஜி. கிருஷ்ணன் வீட்டில் குருஜி அவர்கள் திருப்புகழ் பாடல்களை இரண்டு மணி நேரங்கள் வியாழக்கிழமை தோறும் கற்றுத்தருகிறார் என்று கேள்விப்பட்டதும், வகுப்பிற்குச் செல்வதற்குத் தயாராகிவிட்டோம். அது குருஜி தில்லியிலிருந்து சென்னை வந்து சனிக்கிழமை தோறும் திருப்புகழ் பாக்கள் கற்றுக்கொடுக்கும் வகுப்பிற்குச் செல்லும் வரை நீடித்தது. 1983 இல் என் பெண்ணிற்கு திருமணம் நிச்சயமாகியிருந்த போது அவர் ஒரு நாள் எங்கள் வீட்டில் திருப்புகழ் இசை வழிபாடு நடத்தியது மறக்கவே முடியாது. அதேபோல அவள் கருவுற்றபோதும் குருஜியே எங்கள் வீட்டில் திரு. ஜிக்கி மூலமாக திருப்புகழ் வழிபாடுக்கு ஏற்பாடு செய்தது எங்களை மெய் சிலிர்க்க வைக்கிறது. அது மட்டுமா? குருஜி அருளால் பெண் வயிற்றுப் பேரன் பிறந்த இரண்டே மாதங்களில் நம் அகத்திலேயே திருப்புகழ் வகுப்பு ஏற்பாடு ஆகியிருந்தது எங்களுக்கு ஒரு வரப்ரசாதம் ஆகும். குருவின் அருளும் இறைவன் அருளும் இருந்ததால்தான் நாங்கள் நினைத்தது நடந்தேறியது என்று அறிந்து மகிழ்ச்சியடைந்தோம். என்னே இறைவன் செயல். திருப்புகழ் வகுப்பின் போது என் பேரனை மடியில் போட்டுக்கொண்டு வகுப்பில் உட்கார்ந்து கொண்டு பின் அவர் கொடுக்கும் விபூதியை குழந்தை நெற்றியில் இட்டதின் பயன் அவன் ஐ.ஐ.டி. எஞ்சினீயரிங் பட்டப்படிப்பு படித்து இப்பொழுது USAயில் ஒரு

யூனிவர்சிடியில் PHD படித்துக்கொண்டிருக்கும் வாய்ப்பு கிட்டியிருக்கிறது என்றால் குருவருளைக் கண்கூடாகக் கண்ட அநுபவம் எங்களுக்கே உரித்ததாகும் என்று சொன்னால் அது மிகையாகாது. அதேபோல் குருஜியின் அருளால் பலகாலம் திருப்புகழில் ஊறிய திரு. ஜி. கிருஷ்ணன் அவர்களது மகளை என் மகனுக்கு மணமுடித்து வைக்கமுடிந்தது. இதெல்லாம் முருகன் குருஜி மூலமாக எங்களுக்கு அளித்த வரம் என்று சொல்லலாம். இதனை எக்காலத்திலும் மறக்க மாட்டோம். நாங்கள் பெற்ற இன்பம் இந்த அன்பர்கள் யாவரும் பெற வேண்டும் என்பதற்கு இணங்க இதைப்போலவே எல்லா அன்பர்களுக்கும் அவர் அரூபமாக இருந்து நல்லது செய்து அவர் பெருமையை நிலை நாட்டட்டும் என முருகனை பிரார்த்திக்கிறோம். நன்றி.

அன்பர்கள் யாவரும் தங்கள் தங்கள் சிறப்பான அநுபவங்களைச் சொல்லக் கேட்டு ரசித்தாலும், திருப்புகழ் அன்பர் அல்லாத ஒரு எழுத்தாளர் பெண்மணி குருஜியைப்பற்றி என்ன எழுதியிருக்கிறார்? எப்படி? கவிதை வடிவில் என்று பார்த்தால் நமக்கு பிரமிப்பாக இருக்கும். அது நமக்கும் பெருமையல்லவோ? அந்தப் பெண்மணி யாராக இருக்கும்? இதோ அந்தப் பெண்மணியைப்பற்றிய சில வரிகள்.

**சௌந்தரா கைலாசம்---** (பிப்ரவரி 28, 1927 - அக்டோபர் 15 , 2010) தமிழக எழுத்தாளர். எளிதாகப் புரிந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் பல கவிதைகளை எழுதியவர். சிலேடைகளைக் கவிதைகளில் புகுத்துவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். சிலேடைச் செல்வராகத் திகழ்ந்த கி.வா. ஜகன்னாதன் மற்றும் அன்றைய தமிழறிஞர்களுடன் நட்பு கொண்டு, தமிழ் மேடைகளில் கவிதை முழக்கமிட்டவர். பக்தி இலக்கியங்களில் ஆழ்ந்தும் தோய்ந்தும் தாமே பாடல் இயற்றத் தொடங்கினார். தமிழறிஞர்கள் உள்பட பலரும் இவர் முயற்சிகளைப் பாராட்டி ஊக்கமூட்டியுள்ளனர். இந்து அறநிலையத் துறை, திரைப்படத் தணிக்கைக் குழு, அகில இந்திய வானொலி ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகப் பொறுப்பு வகித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் பல்வேறு கவியரங்குகளில் பங்கேற்றுள்ள இவர், சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார். இதோ அவர் குருஜியைப்பற்றி எழுதிய கவிதை ---

### திருப்புகழ்ச் சக்கரவர்த்தி திரு. ஏ.எஸ். இராகவன் அவர்களுக்கு வாழ்த்து
(சௌந்தரா கைலாசம்)
மோகனூர் 17–3–90

வடக்குப் புறத்தில் இருந்தபடி
வண்டமிழ் முருகன் அடி பற்றிக்
கிடக்க நினைந்து அவன் புகழின்
கீதம் இசைத்து வாழுபவர்

முருக முருக முருக வென
முழுதாய்த் தனையே வழங்குபவர்
வருக வருக வருகவென
வையகம் எங்கும் முழங்குபவர்

ஊனே உருக உடலுருக
உள்ளம் உருக உயிருருகக்
கூனே மறையக் குறை மறையக்
குமரன் நிழலில் குலவுபவர்

சின்னவயதில் விதி வந்து
செய்த சதியைச் செந்தூரின்
வன்ன மயிலோன் அருளாலே
மாற்றி நடந்து மகிழுபவர்!

என்னவரினும் வரட்டுமென
இருகை ஏந்தி வரவேற்றுத்
தன்னை மறந்தே அருணகிரித்
தமிழின் மழையில் ஆடுபவர்

தானே மட்டும் உணராமல்
தாரணி மாந்தர் அனைவர்க்கும்
கானம் இசைத்துக் கந்தனவன்
கருணைத் திறனைக் காட்டியவர்

ஐயன் முருகன் பெயரதனில்
அமைந்த அரிய சுவையதனை
வையம் முழுதும் பருகிடவே
வார்த்துக் களிக்கும் வள்ளலவர்

ஏறு மயிலோன் துணை நிற்க
ஏ.எஸ். இராகவன் இறை நெறியைக்
கூறிக் கூறி என்றென்றும்
கோபுரம் போல வாழியவே

திருப்புகழ் ஆகிய பேருலகில்
திகழும் சக்கர வர்த்தியெனும்
சிறப்புடன் இராகவன் பல்லாண்டு
செவ்வேள் அருளால் வாழியவே!
நாதன் தாள் வாழ்க!

எவ்வளவு நிஜமான, அழகான வார்த்தைகள்.

இப்பொழுது சில அன்பர்களின் அநுபவங்களை தெள்ளுதமிழில் பார்த்தோமல்லவா? சில அன்பர்களுக்காக ஆங்கிலத்திலும் காணலாமா?

குருஜியின் மூத்த மகள் லலிதா, மாப்பிள்ளை ராஜாராமின் வித்தியாசமான அநுபவங்களை முதலில் பார்க்கலாம்.

**APPAJI** - Lalitha and Rajaram

Our welfare, joy and happiness - for his being just a wonderful father to us!

He was Thiruppugazh Raghavan when addressed formally; or Guruji to thousands of Anbargal. But to us in the family who were privileged to have spent many private years with him at home out of sight of the public eye, he was just Appaji. In those blessed years, we learnt to trust him for his profound and deeply considered views and came to rely upon him for his sound balanced advice. We were filled with his constant advice to treat the world and all its inhabitants with anbu and avirodam, the two most important qualities that characterised a good human being. We also grew to respect him for his prodigious and intimate knowledge of Saint Arunagirinathar's voluminous works and unconsciously fell in awe of Appaji's ability to seemingly conjure such wonderful musical scores with hardly any time devoted to it all! But most of all, we learnt to love him for his thoughts and prayers for our welfare, joy and happiness – for his being just a wonderful father to us!

As for Thirupugazh, his passion; when, we wondered, did Appaji attend to his creative urge! After all we shared so much time at home with him. He conversed with us, dined with us, slept at times common to us and going through, in fact, all the mundane, time consuming chores of a domestic householder. In fact, in the earlier stages, the most creative stage of his life, he would, like most middle class Indians, commute long distances to work in an office to meet the day-to-day needs of a family. We saw him and knew him to live such an ordinary, but committed grihastha life. What little time was available, he would spend taking classes for avid and ardent Anbargal or leading them in protracted, energetic, uplifting and blissful bhajans. Then, when did he find the opportunity for contemplation, time on his own, free to break those complicated compositions of the Thirupugazh into such intricate chandams, to find and apply such extraordinary and yet so appropriate ragams to them? His constant explanation was that he never composed anything himself but that it was Chendil Andavan Himself who was doing it through him. And, knowing that Appaji devoted such little time to composing, we could only come to conclude and believe that it was so - that indeed his beloved Thiruchendur Murugan was flowing His creativity through Appaji!

A word about our mother, Ammaji. If at all Appaji was able to devote so much attention and energy to Thirupugazh, it was only because he had Ammaji all the way with him

to partner with. She was the one who managed the house, giving him the full freedom and energy to devote to the propogation of his beloved Thirupugazh. And it was amazing that she could give him that rock like support without ever intruding or interjecting! Ammaji was the perfect foil for Appaji!

We must also acknowledge that Appaji could not have been the person he was if it was not for the intense devotion and instinctive helpful nature of the thousands of Anbargal that came to accept him as their Guruji. As a family we were privileged to enjoy and be benefitted by their affection. Whenever we had any difficulty, in any of the multiple facets of administration and governance, Appaji would hint of it to an Anbar and sure enough the work would be done. Each of us in fact, has been the beneficiary of the intense affection and boundless, out of the way assistance from hundreds of Appaji's disciples. These are too many to individually acknowledge. We are so very grateful to them all and collectively, therefore, we do place on record, our sincere gratitude for the kindness and benevolence of the Thirupugazh Anbargal and for transferring the devotion to their Guruji to their affection for us.

இப்பொழுது மோகன் என்று எல்லோராலும் அறியப்படும் திரு. ஈ. என். மூர்த்தி (I.A.S. Retd.) அவர்களின் அநுபவத்தை ரசித்து இன்புறலாமா?

Joined Guruji's Thiruppugazh class in 1966 and never missed any of the classes till I joined service in 1973. My service kept me away from Delhi and hence Thiruppugazh classes. Whenever I came to Delhi on leave, Guruji encouraged me to come and learn Thiruppugazh at his residence and even permitted recording of the songs for my personal use. His Benovelance to a person like me, who had no background of carnatic music helped me to continue my journey with thiruppugazh. It is this foresight of Guruji of not insisting knowledge of carnatic music as an essential requirement for learning thiruppugazh helped spread of thiruppugazh and take it to present exhaulted state. Guruji's anbu kept me from straying out of Thiruppugazh path inspite of many alternative paths knocking at my door.

In 1994 before going back to J&K, Guruji blessed and gave me a photo of Lord of Chenthil and asked me to sing "தவர் வாட் தோமர சூலம்" daily which I followed religiously. It gave me peace of mind even in the troubled State of J&K. It also protected me from a rocket attack on Srinagar Civil Secretariat, when the rocket missed my room narrowly.

Similarly, I faced a near miss situation when on 26/1/1995 Republic day celebration in Jammu stadium, there were three bomb blasts inside the stadium. The first blast occurred just 10 feet away from where I was sitting. The 3$^{rd}$ blast occured after I moved away from a spot near Governor's podium and at the same spot where I was 2 minutes before. All these blasts ocured inspite of a heavy security provided for the

function. It was Guruji's advice to sing Thiruppugazh daily that helped me to get Divine Intervention and saved me that day.

I was supposed to receive Guruji on his return fom USA trip in December 1990. But on the morning of the same day my father reached the Lotus feet of Lord Chenthil. Hence, I could not receive Guruji as planned. On arrival when Guruji came to know of the development, he rushed to my place and was with us till all religious functions of the day was over.

Similarly, when my mother attained Murugan's feet Guruji was with us in less than an hour even in the early hours of the day. On his advice all present sang Thiruppugazh for nearly three hours and till the religious function started. Guruji was present till the body was cremated. Guruji by his act showed his affection to his extended family of Thiruppugazh Anbargal. It is this attitude that has kept Thiruppugazh Anbargal as a well knit united family.

திரு. ஈ. என். மூர்த்தி அவர்களின் அநுபவங்களைப் படித்தபின் குருஜியிடம் நமக்குள்ள மதிப்பு பெருகுவதை நம்மையறியாமல் உணரலாம். அதுதான் குருஜிக்கு இருக்கும் தனி மதிப்பு. எந்த இடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற பண்பு தெரிந்தவர். தன் புன்னகையால் யாவரையும் கவர்ந்துவிடுபவர்.

இப்பொழுது திருப்புகழ் அன்பர்கள் அசோசியேஷனின் தலைமை பொறுப்பில் இருக்கும், பங்களூரில் வசிக்கும் திரு. கே. என். கே. என்று யாவராலும் அழைக்கப்படும் திரு. கே. என். க்ருஷ்ணமூர்த்தி அவர்களின் அநுபவங்களைப் பார்க்கலாமா?

## MY INTERACTIONS WITH SHRI. GURUJI

The coincidence I had with Shri. Guruji was that both were born in 'BHARANI NAKSHATRAM'. Further both hailed from the same District Viz. 'TIRUNELVELI'. While Guruji was from 'ARUMUGAMANGALAM' (close to THIRUCHENDUR), I was from 'KARUNGULAM' (Close to Tirunelveli).

When I was posted in Delhi, I was nominated by Shri. Guruji to be Secretary of the 'Silver Jubilee' function committee which led to close interactions with him and the function was conducted in a grand manner, with Sri. T.N. Seshan presiding over the function.

My interactions and dealings were nominal while he was at Delhi. I had reasonably frequent interactions after he shifted to Chennai.

The occasions to contact me personally for Shri. Guruji were few and far between. I would like to recall two instances in this regard. One was when my mother-in-law passed away. He rang up himself and said:

Quote: "KNK I am proud of you. You not only looked after your in-laws but also Sharada's Grand Mother when they had no body to fall back upon." Unquote: This shows how he takes care for others and give timely praise to console them.

Another occasion was when Mr. Venkataraman (Popularly called as 'CHINNA GURUJI' in Bangalore) resigned his post from HAL, he called and said that I should suitably persuade him to withdraw his resignation. I was able to convince Mr. Venkataraman to withdraw his resignation and he was transferred to HAL's Corporate Office from HAL Bangalore Division. This was conveyed to Shri. Guruji who rang me up again and thanked me for my prompt action.

After he shifted to Chennai, myself and my wife visited him in Chennai regularly. My wife used to carry 'MAALADU' (Tirunelveli's Special) and once we went to his house with fruits, he pointedly asked where is the usual 'Maaladu'. My wife managed the situation well by saying that she forgot to pick up the packet in her hurry and she will bring it next day. She made 'Maladu' overnight at my Sambhandhi's place and we took it to him the next day. This shows how he remembers one's action.

Such was the affection Shri. Guruji bestowed on us. He was always kind and blessed us.

During the Silver Jubilee Celebrations, held in Bangalore, organised by the Karnataka Region, Shri. Guruji decided that mementos to GUEST SPEAKERS AND SPECIAL INVITEES would be presented at the start of the function, to which I objected saying it is against protocol. He declined this statement saying that we are not conducting a Corporate function but only a spiritual function and sequence does not matter. That is Guruji!

One piece of very good advise he gave was, 'Be sincere and loyal to the task on hand and HE will look after and ensure the success of the function'. His cardinal advise was 'Work sincerely and whole heartedly and don't go for requesting contributions to conduct major functions and LORD CHENTHIL ANDAVAN will take care of everything as long as we are sincere and honest in our approach'. This we have actually experienced and felt, whenever we organised major functions especially in Karnataka Region. He is the best leader and administrator besides being Guruji.

With profound thanks and blessings to one and all.

K.N. KRISHNAMOORTHY,
PRESIDENT,

இதை அடுத்து குருஜியின் அண்ணா மாப்பிள்ளை திரு. பாலசுப்ரமணியன் அவர்களின் அநுபவத்தைப்பார்க்கலாம்.

## A Spiritual Voyage with Revered Amarar Shri Guruji

It is an apt time for introspection and going back in time for me and Raji, like for every Anbar, as we celebrate our decades old and world wide Thiruppugazh movement. It is a time for savoring the heavenly moments which we had the fortune of experiencing with our revered Amarar Shri Guruji.

As we reflect, our spiritual journey has been entwined and totally shaped by Shri Guruji, through his continuous guidance and encouragement. For both of us, this great Thiruppagazh movement has become the fulcrum of our existence. We can never thank the Divine enough for this Grace.

It was in 1961, when I landed in Mumbai. Both Raji and I had a formal and rigorous background in Carnatic Music. I had started teaching music right from a young age, thanks to the grace of the Lord and the affectionate mentoring of all my Gurus, including the revered Shri Swaminatha Iyer. Meanwhile Raji had completed the five year course in Carnatic Vocal Music at the Sri Thyagaraja Sabha at Matunga and was trained by Ganabhooshanam Shri Vaidyanatha Bhagavathar. With this synchronous background, we dedicated ourselves to the teaching and propagation of Carnatic Music to our enthusiastic band of young students.

The dramatic turnaround happened in 1967, when Shri Guruji introduced us to his 'Paddathi' of Thiruppugazh singing, with its unique approach of blending the heights and variety of Carnatic Music and the Divine Goal of Total Surrender through continuous highlights of the venerable qualities of ANBU, AVIRODHAM and THONDU.

The transition was totally seamless. Our group of students were only too eager to immerse themselves into learning Thiruppugazh in full swing, which they felt as a great boon. Some of them are now full fledged and experienced teachers of Thiruppugazh with Shri Govindarajan and Shri A.S. Mani being some of the earliest.

Our understanding of the Ragams & Chandams helped us to enjoy the feast and we can recall many an instance where there were intellectually stimulating discussions with Shri Guruji, which he also felt useful and interesting. During each of his visits to Mumbai, he used to stay with us and teach the new Thiruppugazh for us to learn and propogate. His stress on singing Thiruppugazh with full cognizance of ARTHA-BHAVA is well engrained in us.

Shri Guruji's constant divine assurances that Lord Shri Muruga takes care of every segment of our life and that His Blessings are always there for all Anbars, give us all the confidence to face life with courage and hope. It has really helped both of us and our family, like all Anbars to go through the Voyage of Life with balance and cheer.

I am sure that Amarar Shri Guruji is looking up from above and showering all of us, his blessings and guidance today, tomorrow and ever after.

**MURUGA CHARANAM**

தமிழிலும், ஆங்கிலத்திலும் பல அன்பர்கள் குருஜியுடன் தங்களுக்கு நேர்ந்த இன்ப அநுபவங்களைப் பகிர்ந்து கொண்டதை இவ்வளவு நேரம் ஊன்றிக் கவனித்துப் பார்த்து இன்புற்றோம் அல்லவா? அந்த நினைவிலிருந்து சற்றும் நாம் விலகாது அதிலேயே திளைத்து இருக்கலாம். இருந்தாலும் மற்றவர்கள் யாவரும் நம் பங்குக்கு என்ன செய்தோம்? என்று வருந்துவது நன்கு தெரிகிறது. கவலை வேண்டாம். எல்லா அன்பர்களும் ஒரு சேரச் சேர்ந்து அவரைப்போற்றி, அவர் புகழைப் பாடி அவரது ஆசி பெறுவோம்.

குருஜியைப் போற்றி நாமும் புகழ்ந்து பாட இதோ ஏத்தவரிகள்!

1. விந்தைக் குறமாதின் கந்தனருள் பெறவே
எந்தை அருணகிரி இயம்பு திருப்புகழை
சந்தம் தவறாது சந்ததமும் இசைக்க
சிந்தை மகிழ்ந்தளித்த தேவே ! குருநாதா!
(ராகவ குருநாதா ஸ்ரீ ராகவ குருநாதா)

2. ஏறு மயிலேறி வரும் ஈசன் இசைபாட
ஆறுமுக மங்கலத்தே அவதரித்த அண்ணால்!
மாறிலாத தணிகேசன் பேர் பாடிய தூயா
ஊறிலாத நும் பதங்கள் எம் சென்னி மீதே

3. இம்மை பிறவிதனில் யாம் செய்த புண்ணியத்தால்
உம்மை குருவெனவே உவந்தளித்தான் உத்தமனும்
எம்மை ஊக்குவித்து ஏத்து புகழ் சொல்லி வைத்து
தம்மை எமக்கீந்த நும் தாள் என் சென்னியதே

4 தேசுடைய தேன்மதுரத் திருப்புகழ் தொண்டரே
ஆசையுடன் ஆறுமுகன் அருளோதிய அன்பரே
நேசமுடன் நல்லிசையும் நேமமுடன் நல்கினீர்
பாசமுடன் பணிந்தெழுவோம் நும் பதங்கள் தனிலே

5 சாந்த குணச் செம்மலே! எம் சந்தத் திலகமே!
காந்த நிறைத் திருப்புகழைக் கருணையோடு கற்பித்தீர்
மாந்தருக்குத் திருப்புகழே வேதமெனச் சொன்னீர்

வேந்தனே! நும் பத கமலம் எம் சென்னி வைப்போம்

6. எத்தனை ராகம் எத்தனை தாளம்
எத்தனை இனிமை எத்தனை நளினம்
அத்தனையும் நீர் அரவணைத் தன்புடன்
அத்தனே தந்தீர் அழகுற வாழவே
அத்தனையும் நீர் ஸ்ரீ ராகவ குருஜி
அத்தனே தந்தீர் அழகுற வாழவே

குருஜியை ஜிக்கி மாமாவின் இனியவரிகளில் வாழ்த்தியாயிற்று.! குருஜி நமக்கு அறிவுரை கூறி, வாழ்த்தி அதைக்கேட்டு நாம் இன்புற வேண்டாமா? இதோ அவர் கூறிய அறிவுரைகள்.

இவ்வளவு நேரமாக ஒரு நல்ல அறிவு பூர்வமான நமக்குப் பிடித்த படம் பார்த்த நிறைவு, நம் உள்ளத்தில் நிறைந்து விளங்கி ஒளிவிடுவதைக் காண முடிகிறது. சிலர் நாம் குருஜியைப் பார்த்து அவரிடம் திருப்புகழ் பாக்களை கற்றுக் கொள்ளாமல் இருந்துவிட்டோமே என்று நினைப்பதை உணரமுடிகிறது. குருஜி அவர்கள் நமக்கு அருணகிரிநாதர் மூலமாக முருகனை நினைவு படுத்தும் வகையில் ஐநூற்று ஐந்து பாடல்களுக்கு இராக தாளம் அமைத்து நம் மனத்தில் புகுத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் ஒலிநாடாக்கள் கைவசம் இருக்கின்றன. குருஜியை மனதில் நினைத்து, அவைகளைக்கேட்டு இன்புற்று, மேலும் பல ஆசிரியர்களிடம் கற்று நாம் திருப்புகழைப் பாடினோமேயானால் அது நாம் குருஜிக்கு அளிக்கும் காணிக்கை என்றே சொல்லலாம். வேறு என்ன வேண்டும் ஒரு குருவிற்கு? அவர் நம்மை விட்டு எங்கும் போகவில்லை. எங்கெல்லாம் ராம நாமம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் மாருதி இருப்பது போல எங்கெல்லாம் திருப்புகழ் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் நம் குருஜியைப் பார்க்கலாம். அவர் அருவமாக இருந்து நம்மையெல்லாம் ஆசீர்வதிக்கிறார். முருகனின் அருளையும், எந்தை அருணகிரிநாதர் அருளையும், நம் ஆசான், குரு திரு. குருஜி அவர்களின் ஆசியையும் ஒருங்கே பெற்று மேலும் மேலும் பல திருப்புகழ் பாடல்கள் பாடி இந்த வையத்தில் உய்வதற்கு இவர்களையே வேண்டி நிற்போமாக!

வாழ்க குருஜியின் பெருமை! வளர்க அவர்கள் அன்பான அடியார்களின் சேவை!

இத்துணை நேரம் குருஜியுடன் நிகழ்ந்த இன்ப அநுபவங்களை அன்பர்கள் சொல்லக் கேட்டோம். இப்பொழுது குருஜியின் பொன்னான அறிவுரைகளைக் கேட்கலாமா?
"ஆன்மீகத் தத்துவங்களையெல்லாம் உள்ளத்திலே உணர்ந்து அன்புக்கூட்டமாக அவிரோத மனப்பான்மையோடு உள்ளமும், உறவும், ஊரும், உலகமும் அமைதி

பெற மேலும், மேலும் திருப்புகழ்த் தொண்டு செய்ய, கல்யாண சுபுத்திரனாக வள்ளி, தெய்வானையுடன் கூடி தர்பாரில் கொலுவீற்றிருக்கும் அறுமுகவன் அருளை வேண்டி உறுதி கொள்வோம்".

"அனைவருக்கும் விஷு வருட தமிழ் புத்தாண்டிற்கான நல்வாழ்த்துக்கள், வணக்கங்கள், ஆசிகள். இப்புத்தாண்டின் முதல் நன்னாளான ஏப்ரல் 14 ஆம் தேதியன்று, உலகமக்கள் நலம் பெறவும், கலகங்கள் கழியவும் இயற்கையின் கோர தாண்டவத்தால் பாதிக்கப்பட்டு உயிர் இழந்தோர்களின் ஆவிகள் அமைதியுறவும், வாழ்விழந்தோர்கள் மீண்டும் நல்வாழ்வு பெறவும் அன்பர்கள் அனைவரும் கூடி ஆண்டவன் அருளை விழைந்து கூட்டுப் பிரார்த்தனையாக வழிபாடு நிகழ்த்த ஆண்டவன் அருள் புரிவாராக!"

திருப்புகழ் அன்பர்கள் யாவரும் குருஜி சொன்ன சில ஆன்மிகச் சிந்தனைகளைக் கருத்தில் கொண்டு வளையவருவோமேயானால், அது நாம் நம் குருஜிக்குக் கொடுக்கும் மரியாதையும், காணிக்கையும் ஆகும். அவர் பெயரை உலகில் நிலை நிறுத்த அந்த ஆன்மிகச் சிந்தனைகள் வழி நடப்போம்!

அன்பர்கள் கருத்தில் கொள்ள குருஜி உதிர்த்த ஆன்மீகச் சிந்தனைகள் -

"திருப்புகழைக் கற்பிக்கும் அன்பர்கள், திருப்புகழைக் கற்கும் அன்பர்கள், திருப்புகழைச் செவிமடுத்து அநுபவிக்கும் அன்பர்கள், 'திருப்புகழ் அன்பர்கள்' அமைப்பிலே பணி செய்யும் அன்பர்கள் அனைவருக்கும் பணிவான அன்பு கலந்த வணக்கங்கள். திருப்புகழ், ஆண்டவனின் அருள்வாக்காக அருணகிரி மூலமாக உலகுக்குக் கிடைத்திருக்கும் பெருத்த வசனம், மகா வாக்கியம், வேதங்களின் சாரம். அந்தத் திருப்புகழைச் சந்தம் பிறழாமல், பாடுபவரும், கேட்பவரும், அதன் நுண்பொருளை அறிந்து கொள்ளுமாறு எளிய முறையில் ராக, பாவ, தாளத்தோடு நம்மையெல்லாம் ஆண்டவன், பாடிப் பணியச் செய்து வைத்துக் கொண்டிருக்கிறான். இந்தத் திருப்புகழ் நமக்கு அறிவுறுத்தும் வாழ்க்கை முறைகளை ஒவ்வொரு அன்பரும் அறிந்து அநுபவத்திலே கொள்ள வேண்டும்."

"யான், தான் எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றி
யாவருக்கும் தோன்றாது சத்தியம்" (கந்தர் அலங்காரம்)

"உண்மைப்பொருளாக அறிவும் அறியாமையும் கடந்து, அறிவுத் திருமேனியாக, நாதரூபமாக எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் திருப்புகழ் பாக்களிலே 'முருகன்' எனும் நாமத்தோடு ஊடுருவிப் பரந்து நிற்கின்றது. அந்தப் பரம் பொருளைத் திருப்புகழ் பாக்களிலே பாடுபவரும், கேட்பவரும், உணர்ந்து கொள்ள வேண்டுமேயானால், முதலாவதாக நாம் கைக்கொள்ள வேண்டிய நெறியை

அருணகிரிநாதர் நமக்குச் சொல்லித் தருகிறார். "யான்", "தான்" என்னும் இரண்டையும் நம்மிடமிருந்து அறவே அகற்றினால்தான் பரம் பொருளைத் திருப்புகழ் பாக்களிலே உணரமுடியும். "நான் பாடுகிறேன், நான் நன்றாகப் பாடுகிறேன், நான் மற்றவர்களைவிடச் சரியாக, நன்றாகப் பாடுகிறேன்" என்ற இந்த உணர்ச்சிகளை மனத்திலேயிருந்து அறவே அகற்றிவிடவேண்டும். நம்மைப்பாடவைப்பது ஆண்டவன். ஆண்டவன் இச்சையில்லாமல் பாடும் பாடல்கள் நன்றாக அமையாது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். எல்லோரும் ஒரே மாதிரியாகப் பாடமுடியாது. ஆண்டவன் அவரவர்களுடைய சக்திக்கும், ஞானத்திற்கும் ஏற்ப அவர்களைப் பாடவைக்கிறான். ஆகையினால் ஒருவர் இன்னொருவர் குருநாதர் கற்றுக்கொடுத்தபடி சரியாகப் பாடவில்லையே என்று உள்ளத்திலே வருந்துவதோ அல்லது வெளிப்படையாகச் சொல்லிப் பிறர் மனதைப் புண்படுத்துவதோ திருப்புகழ் அன்பர்களின் செயலாக இருக்கக் கூடாது. திருப்புகழ் நமக்குச் சொல்லித் தருகிறது" –

"திருப்புகழை உரைப்பவர்கள், படிப்பவர்கள், மிடிப்பகையை ஜெயித்தருளும் இசைப்பிரியனான முருகன், ராக, பாவ, தாளத்தோடு பாடமுடியாத அன்பர்கள், திருப்புகழை உரை நடையிலேயே படித்துச் சொன்னாலும், மனதளவிலே படித்துத் தெரிந்துகொண்டாலும், அவரது குறைகளையெல்லாம் நீக்கி அருளுகிறான். அருணகிரிநாதரே ஆண்டவனிடம் "கவிக்கொண்டாடு புகழினை படிக்கும் பாடு திறமிலி" என்று தன்னையே நொந்து கொள்கிறார். ஆகையால் "நான் என்பதற்று உயிரோடு ஊன் என்பதற்று வெளிநாதம் பரப்பிரம ஒளி மீதே ஞானம் சுரப்ப மகிழ் ஆனந்த சித்தியொடே நாளும்" களிப்போடு திருப்புகழைக் கற்றுக் கொள்வோம். கற்றுக்கொள்பவருக்கும், கற்றுக்கொடுப்பவர்களுக்கும், திருப்புகழைச் செவி மடுக்கும் அன்பர்களுக்கும், இந்த உண்மை தெள்ளென விளங்கும்படியாக ஆண்டவன் அருள் கிடைக்கட்டும்."

'அன்பு' என்னும் சொல் பெருவாரியாக மலிந்து கிடக்கிறது திருப்புகழ் பாக்களிலே. ஆண்டவன் நமக்கெல்லாம் அறிவுறுத்தும் முதல்தரமான உபதேசம், திருப்புகழ் அன்பர்கள் ஒவ்வொருவரும் தெள்ளத் தெரிந்து மனத்திலே கொள்ள வேண்டிய முக்கியமான ஒன்று "அன்பே சிவம்". இந்தச் 'சிவம்' என்ற அன்பு நம் மனத்திலே ஊறுமேயானால் அது நம்முடைய உள்ளத்திலே தோன்றும் தீய எண்ணங்களை எல்லாம் அறவே ஒழித்து, அந்த உள்ளத்தைப் பிடித்து வாட்டும் தீவினைப் பயன்களையெல்லாம் பொடித்து விழச் செய்து, எல்லா ஜீவன்களிடமும் அன்பைக் காண வைத்து, அத்வைத நிலையை நமக்கு அறிவிக்கும். "தேனுந்து முக்கனிகள்" என்ற திருப்புகழில் இந்த தத்துவ உபதேசம் நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. இந்த அன்பை வெறும் உலகாயதமாக, காரண காரியங்களுக்காகக் கொள்ளாமல், மெய்யன்பினால் ஆண்டவனைப் புகழ்ந்து, கசிந்து பாடி, இந்தப் புனிதமான அன்பை உள்ளத்திலே பெருக்கி வைத்துக் கொள்வோமாக!"

“இந்த மெய்யன்பை உள்ளத்திலே பெருக்கிக் கொள்வோமேயானால், உள்ளம் தூய்மையாகி, அவிரோதம் வளர்ந்து எல்லோருடனும் அன்பாகப் பழகி, பேசி, உறவாடி, அன்புக் கூட்டமாக இருந்து திருப்புகழ் பணியைச் செவ்வனே செய்ய முடியும். அன்பும், அவிரோதமும் அருணகிரிநாதர் திருப்புகழ் மூலமாகத் தரும் ஒப்பற்ற உபதேசங்கள். இந்த இரண்டையும் ஆணவமற்று உள்ளத்திலே பெருக்கிக் கொண்டு திருப்புகழ் பணி தொடர்ந்து செய்வோமாக!”

“திருப்புகழைக் கற்பிக்கும் அன்பர்கள், கற்றுக்கொள்ளும் அன்பர்கள், திருப்புகழைச் செவிமடுத்து அமைதியுறும் அன்பர்கள், “திருப்புகழ் அன்பர்கள்” அமைப்பிலே இருந்து பணிசெய்யும் அன்பர்கள் எல்லோரும் இந்த மூன்று குணங்களைக் கண்டிப்பாகக் கைக்கொண்டால்தான், செய்யும் பணி ஆண்டவனுக்கு உரியதாக தெய்வீகமாக, எல்லோருக்கும் பயனுள்ளதாக, அமைதியைத் தருவதாக அமையும்.”

“இவை தவிர திருப்புகழ் அன்பர்கள் அனைவரும் செய்யும் பணியெல்லாம், ஆண்டவன் தம்மைப் பணிக்கும் பணியாகக் கொள்ள வேண்டும். உள்ளத்திலே ஏற்படக்கூடிய கலக்கங்கள், சந்தேகங்கள், கோப தாபங்களையெல்லாம் அறவே ஒழித்து, ஆசையற்ற நிலையிலே அன்புக் கூட்டமாகப் பாடிப் பணி செய்யும் தொண்டு ஒரு நாளும் வீண் போகாது. ஆசிகள்.” -

இவ்வளவு நேரம் குருஜியுடன், அன்பர்களுக்கு ஏற்பட்ட அநுபவங்களை நேரில் பார்த்து ரஸித்தது போன்ற உணர்வு தோன்றியது அல்லவா? யாவரும் எழுதிய எழுத்துக்களைப் படித்ததில் நேரம்போனதே தெரியவில்லை. இது போதாது. நமக்குக் கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு திருப்புகழ் பாக்களை குருஜி கற்றுக்கொடுத்த முறையில் பாடி, மற்றவர்களுக்கும் அதனைக் கற்றுக் கொடுத்து, அவர் அன்புக்குப் பாத்திரமாகி, செந்தில் ஆண்டவனின் அருளைப் பெற முயன்று, வெற்றி காண விழைதல் வேண்டும். அதற்கு குருஜி அவர்கள் அரூபமாக இருந்து ஆசிகள் வழங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல நம் முருகனை வேண்டி நிற்போம்!

வாழ்க திருப்புகழ் அன்பர்கள்!, வளர்க குருஜியின் பெருமை!,
பெருகட்டும் முருகனின் அருள்!

வேண்டாமை யொன்றைய டைந்துள
மீண்டாறி நின்சர ணங்களில்
வீழ்ந்தாவல் கொண்டுரு கன்பினை
யுடையேனாய்

வேந்தாக டம்புபு னைந்தருள்
சேந்தாச ரண்சர ணென்பது
வீண்போம தொன்றல என்பதை
யுணராதோ

